[illegible]

v 6 No. 48 7 Dec 1933

3L

[illegible]211, M28KH

M33.6.48

189172

978

978

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

23 MAY 1934

Vol 6.] 1933 ௵ டிஸம்பர் ௴ 7௳ [No. 48

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 853
2. கம்பராமாயணம் (கவந்தப் படலம்)
T. N. சேஷாசலம், B.A.B.L. 855
3. யாப்பிலக்கணம்—(வழு)
வித்துவான், M. V. வேணுகோபாலப் பிள்ளை 857
4. அப்பர் (64 கலை-வியாகரணம்-சந்த விருத்தம்)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 858
5. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவரங்கக் கலம்பகம் 859
6. காற்றுமழை (ஆராய்ச்சி)
Shakespeare's Tempest 863
7. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 2-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 865
8. ஞான தீபம்
T. R. இராஜகோபால் 867
9. வர்த்தமானம் 868

கலா நிலயம்

189172

புறங்கை இன்பம்.

இன்பத்தைத் தேடித் தொடர்வதில் இன்று இவ்வுலகத்தின் ஒருபாதி பொய்மோப்பம் பிடித்து அலைகின்றது. இன்பத்தைத் தான் பெறத் தேடவேதக்கதன்றெனின் மோப்பத்தைப் பற்றி வேறு பேசுவானேன். நீதிவழுவா நெறிமுறையில் நல்லனவே செய்து உவகையும் இன்பமும் எய்த முயல்கின்றவர் ஆங்காங்கு ஒரு சிலர் உளர். இதனைத் திருவள்ளுவர் 'ஈத்துவக்கும் இன்பம்' என்று சாற்றுவார். இன்பம் நாடுவதென்னின் இன்னநெறியில் நாடி இன்னதோர் இன்பத்தை எய்துதலே நேரிதென்று நவில்கின்றது அக்குறள். அத்துணை நன்றே. எனினும் ஈதலால் பிறக்கும் பயன் இன்பம் ஆம் என, அவ்வுயரிய வகையிலேனும் பயனென ஒன்றை நினைக்கின்ற மனம், அது எய்தாவிடத்துச் சோர்ந்து இனி இவ்வீகையால் பயனில்லை என்ன ஈகையையே கைவிடுதலுங் கூடுமோவென அஞ்சி, "உள்ளி உள்ள வெல்லாம் உவந்தீயும் வள்ளியோர்" என்று கம்பர்பிரான், ஈகையின் பயன் அதனாற் பெறும் உவகை என ஆக்காமல், உவகை முதலும் அதனுடன் நிகழ்வது ஈகையும் ஆக்கினார். எனின் இன்பம் ஒன்று எய்துதற்கு இது நெறி என்றேனும், அல்லது இந்நெறி சென்றால் எய்துவது இன்பம் என்றேனும், இயம்புவதும் நினைப்பதும், (அந்நெறியும் நல்லதாய் அவ்வின்பமும் உயர்ந்ததாய் இருக்குங்கால்) இழிவுடைய மனநிலையைக் குறிக்குமெனக் கூறவொண்ணாதாயினும், சீரிய பெருமையின் சிகரம் ஆகுமென்றோ செப்பற்கில்லை.

அத்திப்பூப் பூத்தால் போல் எவ்விடத்தோ யாரோ ஒரு சிலர் தவிர உலகத்திலுள்ளோ ரனைவரும் ஒன்றல்லாக்கால் ஒன்றன்பொருட்டுத் துன்பமே கொண்டு வருந்துகின்றனர். இத்துன்பம் ஒருபங்கு என்னின், அத்துன்பம் தீர்தற்கு மேற்கொள்ளும் வீண் முயற்சிகளால் விளைகின்ற வருத்தம் மறுபங்கு ஆகின்றது. இனி, இன்பம் எய்துவதற்கு நெடிது நினைந்திரங்குதலின் வருத்தமோ அவ்விரண்டும் சேர்ந்தவொரு தொகையின் இருமடங்கென்ன இயம்பலாம். துன்பமென்பதொன்று தனியே வருதற்குளதோ அல்லது இன்பத்தை நாடுதலே துன்பமென முடிகின்றதோ என்பது வேறோர் கேள்வி. அதற்கு விடைகூறல் இக்கட்டுரைக்கு அவசியமில்லை. எனினும், உலகம் சுமக்கின்ற இத்துன்பப் பொதியினைக் கண்டு உளங்கசிந்துருகுகின்ற உயரிய குணத்தினோர் சிலர் உறுபொருள் உணர்த்த நேர்கின்றனர். அவர்களில் ஒருவர் ரால்ப் வால்டோ ட்ரைன் (Ralph Waldo Trine) என்பவர். இவர் உரைப்பனவற்றை உற்றுக்கேட்போம்:—

"என் உயிர்வாழ்க்கையானது நலனுறு தன் முழுச்சிறப்பையும் நல்கும்படி செய்வது எங்ஙனம்? ஆற்றல் அதிகாரம் முதலியவைகளின் உண்மையான இரகசியத்தை நான் அறிவது எங்ஙனம்? அழியாத வோர் உண்மைப் பெருமையை நான் அடைவது எங்ஙனம்? என் வாழ்க்கை முழுவதையும் இன்பத்தாலும் அமைதியாலும் உவகையாலும் யான் நிறைப்பது எங்ஙனம்? பண்டு இக்கேள்வியைக் கேட்டிருப்பவர் கோடி கோடி; இன்றைக்கு இக்கேள்வியைக் கேட்டுக்கொண்டிருப்பவர் கோடி கோடி. இன்னும், இக்கேள்வியைக் கேட்பதற்குக் கோடி கோடி பிறக்க நிற்கின்றனர். இக்கேள்விக்கு உண்மையான விடைதான் ஒன்று உளதோ?—நண்ப, உளது, உற்றுக் கேள்.

"நான் ஓர் கருத்து எடுத்துரைக்கின்றேன். அதனை அகமுறத் தழுவிக்கொள். இக் கருத்தில் அடங்கிய கொள்கையை உன் வாழ்க்கையின் ஆதாரமாக அமைத்துக்கொள்வாயாயின், அதனிற்கு அயலில் மற்றவைகளெல்லாம் முறைமுறை பொருந்தி, உன் வாழ்க்கையைப் பெரியதோர் வெற்றியாக்கும். உண்மையில் நீ பெரியவனாவாய், மெய்யாய இன்பம் பெற்றவனாவாய், எல்லாரும் உன்னை அன்புடன் பாராட்டி வாழ்த்துவார். இக்கருத்துடன் கூடிய கொள்கை பரவுமாயின் அது, நாம் வாழும் இப் பழைய உலகத்தை விந்தையென்ன இரவொன்றில் இன்பமயமாய் மாற்றிவிடும். இப்படி மாறுதற்கே இவ்வுலகம் நெடுங்காலங் காத்திருக்கின்றது. மனிதத் தொகுதியில் கணக்கிறந்தோரை இன்று சூழ்ந்திருக்கின்ற இருளும் ஏக்கமும் நீங்க இன்பமும் அமைதியும் உதிக்கலாகுமே. "மனிதன் மனிதனுக்கு இரக்கம் காட்டாமையே ஆயிரக்கணக்கில் மனிதரை யழுவைக்கின்றது" என்னும்வசை உண்மையிழந்து இனிச் செல்லாததாகிவிடும். நன்று, உலகத்திற்கு இத்தனைவாக்களிக்கின்ற இக்கருத்தும் அதனுள் அடங்கிய கொள்கையுந்தான் யாது?

"ஒவ்வொருவனும் தன் காரியமே பெரிய காரியம் என்று விவகரிக்கின்ற ஓர் எண்ணம் எங்கும் பரவியிருக்கின்றது. ஒருவன் வெற்றியும் பெருமையும் இன்பமும் அடையவேண்டுமானால் அவனுடைய கருத்து அத்தனையும் தன்னைப்பற்றியதாகவே இருக்கவேண்டும் என்று கூறியவண்ணம் யாவரும் இருக்கின்றனர். இது பெரும் பிழை; கூற்றுவனைக் கூவியழைக்கும் குற்றம் இதுதான். செம்மைக்கு நேர் எதிரான சிந்தனை இது. நிரந்தரமான உண்மைவிதி யாதெனில், "எனையோர் பொருட்டு நம்முடைய வாழ்க்கையை எவ்வளவிற்கு எவ்வளவு இழக்கின்றோமோ அவ்வளவிற் கவ்வளவு அதனை ஈட்டிக்கொண்டவர்கள் ஆவோம்"—என்பதே. நம்முடைய வாழ்க்கையை நம்மைக் கருதியே நடத்தாமல் மற்றவர் நன்மையை நிகழ்த்தும்படி எடுத்துக் கொடுக்கக் கொடுக்க, நம்முடைய வாழ்க்கை, நிறைவுபெற்று அழகும் இன்பமும் அடைந்ததாகும். நாம் மற்றவர்க்குக் காட்டும் அன்பும் செய்யும் ஊழியமும் அளிக்கும் உதவியும், ஆயிரம் ஆயிரம்மடங்கு அதிகமாகப்பெருகி மீண்டும் நம்மையே வந்து சேரும்.

"செல்வத்திற்கும் செல்வாக்கிற்கும் இன்பத்திற்கும், சாதாரண சுகத்திற்கும் அவாவித்திரிவீர், சற்றே நின்று நீங்கள் ஓயாமல் நாடுகின்ற வழிகளைச் சோதித்துக் கொள்ளுங்கள். கொள்வீராயின், நீங்கள் ஓடும் வழி முற்றிலும் தப்பான வழியென்பதைத் தெரிந்து கொள்வீர். உலகிற் பெரும்பகுதியினோர் இத்தப்புவழியையே பின்பற்றுகின்றனர். எனினும் பெரும்பாலும் இது தெரிந்து செய்யும் பிழையன்று. நேரிய வழி எதுவென்று தேராமையாலே இது நேர்கின்றது. தான் தான் தன்னைப்பற்றிய நினைவே தேக்கித் தேக்கி அலையாமல் வாழ்க்கை முழுவதையும் பிறர்பொருட்டே உழைத்தல்வேண்டும் என்னும் கொள்கையை உட்கொள்ளுங்கள். அப்பொழுதேதான் தன்னுடைய மேன்மையும் நன்மையும் ஆயிரமடங்கு அதிகவேகத்துடன் அவனைத் தேடிவந்து அடையும். உன் பேரையும் புகழையும் நாட்டவேண்டுமென்பது உன் நோக்கமோ; செல்வம் ஈட்ட வேண்டுமென்பது உன் இச்சையோ; சுகங்கள் அனுபவிக்க வேண்டும் என்பது உன் ஆசையோ; இன்பம் துய்க்கவேண்டுமென்பது உன்வேட்கையோ? எனின், உன்னுடையபேரை, நிலைநிறுத்தவும் உனக்குச் செல்வம் சுகம் இன்பம் முதலியவைகளை ஈட்டிக்கொள்ளவும் முயலாமல், பிறருக்கே இவைகளை ஈட்டிவைக்க முயல்வாயாக. அப்பொழுதுதான் நீ உனக்கென்று விரும்பியவைகளை அடைவாய்.

"இதனை உணர்ந்துகொள். நேராகத் தேடிச்செல்வதால் உண்மையான இன்பம் அடைவதென்பதில்லை. அது வருவதாயின், மற்றவர்களுக்கு நாம் அளிக்கும் இன்பத்தால்தான் வருதல்கூடும். அப்படியே, நேராகத் தேடிச்செல்வதால் உண்மையான பெருமையேனும் சிறப்பேனும் புகழேனும் சுகமேனும் அடைவதென்பது இல்லை. பிறருக்கு இவைகளை நீ செய்வதால்தான் நீ பெறக்கூடும். இதனை உணர்ந்து உனது வாழ்க்கையை இதற்கு இசையும்படி செய்வாயாயின், அதன் நன்மையை எல்லாம் உன்னுடையது ஆக்கிக் கொள்வாய். உணராயாயின் அதற்குரிய அபராதத்தை நீ செலுத்தித்தான் தீரவேண்டும்.

ரால்ப் வால்டோ ட்ரைன் புகட்டுமோர் அறிவு இன்னது. நற்பொருளில் சீரிய கூரிய வாசகம் இது என்பதை மறுத்தல் எளியதன்று; மறுக்கவும் வேண்டா. இந்தக் கொள்கையாற்றானே தூண்டப்பெற்ற உள்ளத்தினை உடையதாயின் இவ்வுலகம் விந்தையென்ன இரவொன்றில் இன்பமயமாய் மாறிவிடும், என்று இவர் அளிக்கின்ற நல்வாக்கை நம்புவதால் நன்மையுளது. முன், ஜோஸப் மஸ்ஸீனி என்பவர், "உயரிய கொள்கை இது கொண்மின் கொண்மின்" எனப் பெரிது விளம்பி, இறுதியில், "உன்னுடைய சோற்றிற்குத் துணிக்கும் ஓர் உரிமை உளது; அதனை வற்புறுத்திக் கொள்" என இயற்றியது போன்றதோர் பரிகசச்சாகசம் அன்று இது. அது யானையை விளம்பித் தேரையை இயற்றுந் தன்மைத்து; உயரியகொள்கைகளால் அரசியல் வாதங்களை நடத்த நினைக்கும் போதெல்லாம் அவர் முன்னே இவ்வகைத் தேரைகளே தத்திச் செல்லவேண்டுமென்பது இன்றியமையாததே.

ட்ரைன் என்பவர் அரசியல் வாழ்க்கையைக் கருதாமல் மனித வாழ்க்கையின் நன்மையைக் கைக்கொண்டாராதலின், விளம்பியயானை யானையாகவே நடந்து வருகின்றது. அந்த நன்றியை நாம் அவருக்குச்செலுத்தத்தான் வேண்டும். எனினும் ஒன்று-இந்த ஆசிரியர் செவியறிவுறுத்திய உரைகளை உற்றுக்கேட்டோம். இனி அவ்வுரைகளுக்குள் கரந்திருக்கும் ஓர் இரகசியத்தின் நுட்பத்தினை உற்றுநோக்குதல் வேண்டும். நோக்குங்கால், விளம்பி யழைத்துவந்த அவ் வரசயானைக்குப் பின்நடை கற்பிக்கப் புகுகின்றனரோ இவர் என்னும் ஓர் ஐயம் விளைகின்றதே. "பிறருடைய இன்ப நலன்களையே நீ நாடக்கடவாய்" என்று சாற்றுமிவர் எற்றுக்கு அதனைச் செய்யச்சொல்கின்றனர் எனக் கேட்குங்கால் அவர் கட்டுரையினின்று பிறக்கின்ற விடையினால், கூறிய கொள்கையின் பெருமையைக் காத்தல் அரிதாகி விடுகின்றது. "உன்னுடைய இன்ப நலன்கள் கைவரும் வண்ணம் நீ பிறருடைய இன்ப நலன்களை இயற்ற முயல்தல் வேண்டும்" என்ற இம்முடிவு, "உன் இன்பத்தை அகங்கையால் பற்றாமல் புறங்கையால் ஏந்திக்கொள்" என்ற பான்மையாகத் தீர்கின்றதே.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்— 11. கவந்தப் படலம்.

[848-வது பக்கத் தொடர்ச்சி]

கவந்தனைக் காணக் கம்பரே கலங்கினார்.

அறுந்த நாசியோடு அயோமுகி அகன்றபின் தம்பியோடிருந்து அக்குன்றிலே அரிதிற் கழித்த இராமன் விடியலில் எழுந்து சீதையைத் தேடினனாய் இலக்குவனோடுங் கடிதுபோயினான். இவர் சென்றநெறி, எவ்வுயிருங் கையின்வளைத்து வயிற்றடக்குங் கவந்தன் வனத்தின்கண் கொண்டுசேர்த்தது. அவ்வயின் இவ்வீரர் செல்லுங்கால், எறும்புமுதல் யானையீறாக அனைத்துயிரும், விலக்கரிய வலையிற்பட்டனபோல் உலைந்து சாய்ந்து வெறுப்புற நோக்கி வெருவலாயின. அவைதாம்,

மரபுளி நிறுத்திலன் புரக்கு மாண்பிலன்
உரனிலா னொருவனாட் டுயிர்கள் போல்வன
வெருவுவ சிந்துவ குவிவ விம்மலோ
டிரிவன மயங்குவ வியல்பு நோக்கினார்

[குடிமக்களை அவரவர் முறைப்படி நிறுத்தாதவனும், அவர்களைக் காக்கத்தகுந்த மாண்பு இல்லாதவனும், திறமை இல்லாதவனும் ஆகிய ஓர் அரசனது நாட்டில் உள்ள உயிர்களை ஒத்தனவாகி, நடுங்கின சில, சிதறிப்போயின சில, ஒன்று சேர்வன சில, வருத்தமுடன் விரைந்து ஓடுவன சில, திகைத்துநிற்பன சில, ஆயின தன்மையைநோக்கினார்]

மரபுகெடத் திறனின்றி ஆளும் அரசனது ஆணையும் கவந்தன் கைகளும் ஒத்த பரிசு உணரற்பாலதே. இக்காலம் எல்லா அரசும் இவ் விலக்கணத்திற்கே ஏன் ஏன் என்கின்றன ஆதலின், உலகடங்கலும், மனிதரனைவரும் வெருவிச் சிந்திக் குவிந்து விம்மி இரிந்து மயங்கும் இயல்பு விந்தையொன்றாம் விளைவிக்க வல்ல ஆற்றல் இலதாகிவிட்டது. இதுவே இயற்கையென்று தீர்ந்துவிட்டமைபால் கவந்தன் கைகள் இல்லாமலொழியுமாயின், "எங்ஙனம் வாழ்வேம் யாம்" என இக்காலம் ஆங்காங்கு உயிர்கள் ஏங்காநிற்கும்.

இக் கவந்தன்கைகளை அறுக்கவந்த வீரரும் அதனுட் படுபவர் ஆயினர். எனினும் தம்மை நெருக்கித் துன்னியது யாதென முதலிற் றேர்ந்திலர். அரக்கர் சேனையே தம்மை வளைகின்றதென்ன எண்ணி, இராவணன் ஊரையும் அண்மினான் என இராமன் உவகையுங் கொண்டனன். முரசும் சங்கும் முழங்கவில்லையாதலின் வளைந்தது சேனையோ அன்றென்று இளையவன் மறுத்து, பாற்கடல் கடைந்த அப்பாம்பு வாசுகியேதானே தன் வாலுந்தலையும் கவிலெனப் பின்னி இறுக்குகின்றது என அயிர்த்ததை இராமனும் நன்றென நினைந்தனன். இப்படியே சுவையில பல இவர் இன்னும் சிந்தியாமுன்னம் இன்னவர் அக்கவந்தன் நேர்சென்று நின்றனர். இனி அக்கவந்தன் தோற்றத்தைப் பலபடப் பகரவேண்டியதோர் புலவர்கடமையைக் கம்பர் ஒன்பது பாசுரங்களாற் செலுத்துகின்றார்—

வெயிற்சுட ரிரண்டினை மேரு மால்வரை
குயிற்றிய வாமெனக் கொதிக்குங் கண்ணினன்
எயிற்றிடைக் கிடையிரு காத மீட்டிய
வயிற்றிடை வாயெனு மகர வேலையான்

[இரண்டு சூரியர்களை மேருமலையில் பதித்தது என்னும்படி கொதிக்கின்ற கண்களை யுடையவனும், பற்களின் இடையிடையே இரண்டு காததூரம் அமைந்ததும், வயிற்றின் நடுவில் உள்ளதுமான வாய் என்று கருதப்படும் சுறுமீன்களையுடைய சமுத்திரத்தை யுடையவனும்]

ஈண்டிய புலவரோ டவுண ரிந்துவைத்
தீண்டிய நெடுவரைத் தெய்வ மத்தினைப்
பூண்டுயர் வடமிரு புடையும் வாங்கலின்
நீண்டெனக் கிடந்தன நிமிர்ந்த கையினன்

[ஒன்று கூடிய தேவர்களும் அசுரர்களும், சந்திரனை அடைதூணாகச் சார்ந்த பெரிய மந்தரமலையாகிய தெய்வத்தன்மை பொருந்திய மத்தினைச்சுற்றிச்சிறந்த வாசுகி என்னும் பாம்பாகிய கயிற்றை இரண்டு பக்கத்திலும் இழுத்ததால் நீண்டுவிட்டதுபோல் கிடந்த நீளமான கைகளையுடையவனும்]

தொகைக்கனற் கருமகன் றுருத்தித் தூம்பெனப்
புகைக்கொடி கனலொடு பொடிக்கு மூக்கினன்
பகைத்தகை நெடுங்கடற் பருகும் பாவகன்
சிகைக்கொழுந் திதுவெனத் திருகு நாவினன்

[கருமானுடைய நெருப்பு மிகுந்த உலைக்களத்தின் துருத்தியினது துவாரம்போல் நெருப்பையும் அந்நெருப்பின் கொடிபோன்ற புகையையும் வீசுகின்ற மூக்கை உடையவனும், பகைமை பொருந்திய பெரிய கடலைக் குடிக்கின்ற வடவாமுக அக்கினியினது சுவாலையின் கொழுந்து என்னும்படி சுழல்கின்ற நாக்கை யுடையவனும்]

புரண்டுபாம் பிடைவர வெருவிப் புக்குறை
அரண்டனை நாடியோ ரருவி மால்வரை
முரண்டொரு முழைநுழை முழுவெண் டிங்களை
இரண்டு கூறிட்டென விலங்கெ யிற்றினன்.

[இராகு என்னும் பாம்பு தனக்கருகு புரண்டு வருவதால் அஞ்சி, புகுந்து தங்குவதற்குரிய காவல்இடத்தைத் தேடி, அருவிகளையுடைய ஒரு பெரிய மலையின் வலிய குகையில் நுழைகின்ற வெண்ணிறமான பூரண சந்திரனை இரண்டாக வெட்டிவைத்ததுபோல் தோன்றுகின்ற கோரப்பற்களையுடையவனும்]

ஓதநீர் மண்ணிவை முதல வோதிய
பூதமோ ரைந்தினிற் பொருந்திற் றின்றியே
வேதநூல் வரன்முறை விதிக்கு மப்பெரும்
பாதகந் திரண்டுயிர் படைத்த பண்பினன்.

[குளிர்ச்சிபொருந்தியநீரும் நிலனும் இவை முதலாகச் சொல்லப்பட்ட பஞ்சபூதங்களாலும் இவன் உடல் ஆக்கப்படாமல், வேதநூல்களில் முறைப்படி விதிக்கப்பட்டுள்ள அந்தப் பெரிய பாதகங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து உயிர்பெற்றது போன்ற தன்மையுடையவனும்]

வெய்யவெங் கதிர்களை விழுங்கு வெவ்வராச்
செய்தொழி லிலைதுயில் செவியின் றொளையான்
பொய்கிளர் வன்மையிற் புரியும் புன்மையோர்
வைகுறு நரகையும் நகும்வ யிற்றினன்.

[வெய்ய கிரணங்களையுடைய சூரியனையும் விரும்பத்தக்க கிரணங்களையுடைய சந்திரனையும் விழுங்குகின்ற கொடிய பாம்புகளாகிய இராகுவும் கேதுவும் செய்வதற்குக் காரியம் ஒன்றும் இல்லாமல் தூங்குவதற்கு ஏற்ற காதின் தொளைகளை யுடையவனும், பொய்வாழ்க்கையால் வளர்கின்ற கொடுமையோடு எதனையும் செய்கின்ற அற்பகுணமுடைய பாவிகள் தங்குகின்றநரகத்தையும் தனக்கு ஒப்பாகாதென்று பரிகசிக்கின்ற வயிற்றையுடையவனும்]

முற்றிய வுயிரெலா முருங்க வாரித்தான்
பற்றிய காத்தினன் பணைத்த பண்ணையில்
துற்றிய புகுதருந் தோற்றத் தால்யமன்
கொற்றவாய் தற்செயல் குறித்த வாயினன்

[முதிர்ந்த பிராணிகள் எல்லாம் அழியும்படி வாரியெடுத்த கைகளையுடையவனாகி, பருத்த படகுபோன்ற தன் வயிற்றில் திணித்தற்கு, அப்பிராணிகள் புகுகின்ற தோற்றத்தால்,யமனது பட்டணத்தின் வெற்றிபெற்றவாயிலைப் போன்ற வாயை யுடையவனும்.]

ஓலமார் கடலென முழங்கு மோதையான்
ஆலமே யெனவிருண் டழன்ற வாக்கையான்
நீலமா னேமியிற் றலையை நீக்கிய
காலநே மியிற்பெருங் கவந்தக் காட்சியான்

[ஓசை பொருந்திய கடல்போல் ஒலிக்கும் ஆரவாரம் உடையவனும், ஆலகாலவிஷம் போன்று கறுத்துக் கொதிக்கின்ற உடலை உடையவனும், நீலநிறமுடைய திருமால் சக்கிராயுதத்தால் தலையை வெட்டிய காலநேமி என்னும் பெயருடைய அசுரன்போன்ற பெரிய கவந்தத்தின்தோற்றத்தையுடையவனும்]

ஆகிய அவ்வெருவரு உருவினை வீரர் இவ்விருவரும் ஒருங்கு நோக்கினர். அவ்வளவில்,

அவ்வழி யிளையவ னமர்ந்து நோக்கியே
வெவ்விய தொருபெரும் பூதம் வில்வலாய்
வவ்விய தன்கையின் வளைத்து வாய்பெயுஞ்
செய்வதெ னிவணெனச் செம்மல் சொல்லுவான்

[அங்கு இலக்குவன் அதனை உற்றுப்பார்த்து, "வில்தொழிலில் வல்லவனே, கொடிய ஒரு பெரும் பூதமானது தனது கைகளால் வளைத்து நம்மைத் தன் வாயினுள் போட்டுக்கொள்ளும், நாம் இப்பொழுது என்ன செய்வது" என்ற கூற இராமபிரான் மறுமொழி கூறுவான்]

இப்பூதத்தினின்று இனித் தப்புமாறில்லை என்னவோர் கையறுநிலையில் 'செய்வது என்' எனச்சோர்ந்தனனோ, அல்லது, ஆவதுசெய்ய அண்ணன்றன் ஆணை வேண்டினனோ அறிதல் அருமை. "பூதங் கொல்லப் பொன்றுதியோ" என்று பின்னர் இராமனைத் தேற்றுபவனும், "இதன் வாயுங்கையும் பிழையாமல்யான் துணிக்கும் வண்ணம் காணுதி" என முந்துபவனும் இவ்விலக்குவனேயாதலின், கரன் முதல் அரக்கரை அழிக்கும் தம் வாளியும் வாள்களும் பூதத்தை வெல்லாவென அஞ்சினனென்ன எண்ணற்கில்லை. வான்மீகத்திலோ, கவந்தனை அரக்கனென்றே யன்றிப் பூதமென்று இவர் கொண்டிலர். அன்றியும், இலக்குவன் தான் மாத்திரம் அவ்வரக்கன்கையில் சிக்கிக்கொண்டதாகக் கருதித் தன்னைக் காத்து மீட்கும் பொருட்டு இராமனும் இவ்விடரிற்கு அளாகாவண்ணம், "என்னை விட்டுவிட்டு ஓ, இராகவா, நீர் தப்பித்துக் கொள்ளும்; என்னைப் பலியாகக் கொடுத்துவிட்டு நீர் சுகமாகத்தப்பித்துக் கொள்ளும்" என்ன வேண்டுவது ஒருவாறு உணரக் கூடியதாயிருக்கின்றது; இந்நூலிலோ அன்ன பொருள் அமையாது. இனி இராமன் இயம்பிய மொழிகளை நோக்கின் அவ் வமைதியின்மை பின்னும் அதிகமாம்.

பாரிட மேயிது பரவை சுற்றுறும்
பாரிட மரிதெனப் பரந்த மெய்யது
பாரிடம் வலம்வரப் பரந்த கையது
பாரிடந் தெடுத்தமா வனைய பாழியாய்

[பூமியைத் தோண்டிஎடுத்துக்கொணர்ந்த வராகத்தையொத்த பலமுடையவனே, கடல்சூழ்ந்த அகன்ற இடங்களெல்லாம் போதாதென்னும்படி பருத்த உடலையுடையது, இடப்பக்கமும் வலப்பக்கமும் பொருந்திய நீண்ட கைகளையுடையது, பார் நீ, இது பூதந்தான்]

என்று தன்தம்பியின் ஊகத்தைத் தானும்யமகமுடன் ஒவ்வினன். இலக்குவன் கேள்வியும் இராமன்பதிலும் அமைந்த இவ்விரண்டு செய்யுள்களின் பொருளும் சுவையுமற்ற ஏழ்மையை நோக்குங்கால், இவைகளில் ஏதேனுங் கம்பசூத்திரங் கரந்திருக்கின்றதோ வென்று ஐயுறவெய்துதற் கிடமேற்படுகின்றது. யமகம் அமையப் பாடுதற்கு இராமன் சமயம்பார்த்த அழகும், கண்ணிறைந்து நிற்குமொன்றை 'பார்நீ' என்று காட்டிய அறிவும், பூதமே என்று கொள்வதற்கு அவன் கூறிய காரணங்களும் எல்லாம் ஒன்று கூடி, கம்பர் இதுகாறும் ஈட்டிய புகழை அழிப்பதற்கோர் சதியே செய்கின்றன. அல்லது, தற்காலம் எழுதப்பெறுகின்ற தமிழ்நாடகங்களில் சுவையும் பொருத்தமும் அற்று நிகழும் 'சம்பாஷணை'யின் காற்று, முக்காலமும் கெடுக்கவல்ல கொடுமையாதலின், முன்னரே சென்று அக் கம்பர்நாவினைத் தீண்டிற்றோ. அல்லது, "ஏமாங்கதத்திளவரசன்" என்னும் நூலினுள் பயின்ற அவ்விலக்கண சிகாமணி இலக்கிய மகாகவி சாபாலப்புலவனுடன் இக்கம்பரும் சமஆதனம் தேடினரோ என்னின், அப்புலவன் இயற்றிய காக்கைபுராணத்தின்கண்,

ஐந்துநீள் விரல தழகிப மூக்கது
பொந்தினுள் புழுவை விழுங்கும் வாயது
நந்தலில் குலத்து நங்காய் நான்முகனே
தந்ததித் தாளில் கடாரக் காக்கையே

எனக் கடாரக் காக்கையைப்பாடிய பாட்டு, இராமன் இங்கு இப்பாரிடத்தைப் பாடிய பாட்டை வெல்லும் வெல்லும் என்ன மதர்க்கின்றதே!

இன்னவாறு இராமன், பூதமேயது வெனப் பெரிதுணர்ந்து புகன்றபின், இனிச் செய்வது யாதெனச் செப்பவேண்டி நேர்கின்றது. பார்த்தார் கம்பர். மூன்று காண்டங்கள் முடியப்பாடி இளைத்திருக்கின்றார். ஒட்டக்கூத்தனோ காப்பியத்தை முடித்திருக்கின்றனன். மன்னனுக்கு உத்தரந் சொல்லவேண்டும். இளைப்பாற நேரமோ இல்லை. இராமனுந்தான் சனகன்பெற்ற அன்னத்தை இழந்து திகைத்திருக்கின்றனனாதலின் அவனை இப்பொழுது எது சொல்லவைப்பினும் தகும். தன் பாட்டினை அது ஓடுமிடமெல்லாம் கூசாமல் ஓடவிடுகின்றார். எனினும் ஒன்று. சடாயுதன்உயிரை நீத்தலோடு வான்மீகர் ஆரணிய காண்டத்தை முடிக்காமல், மூக்கும் முலையும் வீணே யுகுக்கஓர் அயோமுகியையும், வயிற்றிலே வாயைக் காட்ட ஓர் கவந்தனையும், இராமன் முன்னரேகேட்டிருந்த மதங்கவனத்தை அவனுக்குக் காட்ட வோர் சவரியையும், பின்னேவரநின்றதன்னை வீணேவருத்துதற்கேவைத்தனர் போலும் என்னும் வெகுளி கம்பர்தம் களைத்திருந்த உள்ளத்தில் சுரந்திருப்பினும் இருக்கலாம். வெகுண்டனரேனுந் தன் விதியை நினைத்து அடங்கினராகி, கூடியவரையில் அவ் வயோமுகிப்படலத்தை ஒருவாறு ஓதுதற்குரியதாய் வலிந்து பாடி முடித்தார். இராமன் 'சாவேன்' என்றபோதும், இலக்குவன் அயோமுகியைக் 'கொல்வேன்' என்றபோதும், அவனே கொன்றிலன் என்றதை இராமன் அறிந்தபோ

தும், 'பரவாயில்லை' என்னும்படியான பாசுரங்கள் இரண்டொன்று 'கம்பர் நம்மைப் பாடுகின்றாரே' என்ற கடமையைக் கருத்துட்கொண்டு அமைந்தன. அவ்வரக்கியின் உறுப்பை அறுத்து ஓட்டிய கம்பர் 'அப்பாடா' என்று நெட்டுயிர்த்துத் திரும்புகையில் இக் கவந்தன் வந்து எதிர் நிற்கின்றான். பாடிப்பாடி ஓய்ந்திருக்கும் ஒருபுலவர் இனிஎன்செய்வார் பாவம். தன்னையே தின்னுதற்கு அவ்வான்மீகிமுனிவர் ஏவிய ஓர் பூதம் இது என்ன அதனை அஞ்சினர். தான் பூதமெனக் கொண்ட இக்குறிப்பைத்தான் இலக்குவன் மீது ஏற்றிவிட்டார் போலும். இதனினுந் தகுதியுடைய தற்குறிப்பேற்றம்வேறொன்று காணலரிது. இப்பெரும்பழி தனக்குச் செய்த அவ்வடநூல் முனிவரைப் பொறுப்பதற்கு பெருந்தகைக் கம்பர் உழைத்தாராலும் முற்றிலும் பொறுப்பதற்கு வேண்டிய மனவுறுதியை அவர்பால் இச்சமயம் எதிர்பார்ப்பது நேரிதன்று. அப்பழிக்கு எதிர்ப்பழி சிறிதேனுஞ் செய்யாமல் விடுதற்கு அவர் மனம் ஒவ்வவில்லை. ஆதலின், அம் முதனூல்முனிவர் செய்ததற்கு நேர்மாறாக ஒன்று தான் செய்தேனும் தன் வெஞ்சினத்திற்கு இரையூட்டப் புக்கவர்போல், "என்னைச் சாகவிட்டுவிட்டு நீ செல்" என்று அங்கு இலக்குவன் உரைத்திருக்க இங்கு, இராமனை இலக்குவனுக்கு அதனையே உரைக்க வைத்தார். அதன்படியே இராமனும்—

தோகையும் பிரிந்தன ளெந்தை துஞ்சினன்
வேகவெம் பழிசுமந் துழல வேண்டலேன்
ஆகலின் யானினி யிதனுக் காமிடம்
ஏகுதி மீண்டுநின் றிளவலே யென்றான்

பின்வரும் பாசுரத்தில், இவ் 'வேகவெம்பழி' யாதென இராமன் விரித்துரைத்திராமையின், இதன்முன் பாரிடயமகம் பாடியதைக் குறித்துத்தான் பேசினனோ வென்று சிலர் மயங்குவார்.

ஈன்றவ ரிடர்பட வெம்பி துன்புறச்
சான்றவர் துயருறப் பழிக்குஞ் சார்வுமாய்த்
தோன்றலி னென்னுயிர் துறந்த போதலால்
ஊன்றிய பெரும்பழி துடைக்க வொண்ணுமோ

அப்பழியைத் துடைக்க வேறுவழியில்லை என்பது அத்துணை நிச்சயமாயின் தன்னுயிர் துறக்க வோர் பூதம் தென்படும்வரையில் காத்திருந்த காரணந்தான் கழறு தொழிந்தனன். கைவாளும் இன்று அவன்மதியேபோல் மழுங்கிவிட்டதோ!

இல்லியல் புடையநீ ரளித்த வின்சொலாம்
வல்லியவ் வரக்கர்தம் மனையு ளாளெனச்
சொல்லிநன் மலையெனச் சுமந்த தூணியெவ்
வில்லினென் செல்வெனோ மிதிலை வேந்தன்பால்

மிதிலைவேந்தன்பால் இவன் செல்லாமலே இருந்துவிடலாமே; அல்லது தூணியையும் வில்லையுந் துறந்து செல்லலாமே; இச்சிறு சூழ்ச்சி இராமனுக்கு ஏன் தோன்றவில்லையோ!

தளையவிழ் கோதையைத் தாங்க லாற்றலென்
இளைபுரிந் தளித்தன்மே லிவர்ந்த காதலேன்
உளனென வுரைத்தலி னும்ப ரானென
விளைதன னுதலின் விளித னன்றென்றான்.

'உம்பரான்' என்பது இறந்து விண்ணுலகடைந்தவன் என்னும் பொருளில் இங்கு நிற்கவேண்டுமாயினும், இத்தகைய வெள்ளைச் சொற்கள் தன் வாயினின்று வருகின்றனவேனும், தான் ஒரு தேவனே என்பதை யாரும் மறக்கப்படாதென்று வற்புறுத்துதற்கு அச்சொல்லை இராமன் பயின்றிருத்தலுங் கூடும். தன் நெற்றிக்கண்ணைத் திறந்துகாட்டி ஓர் விரிசடைக் கடவுள் தான் பாடிய பாட்டினைப் பாதுகாக்க ஒருநாள் நேர்ந்தது. உம்பரான் என்ற பான்மையில் தன் பாட்டைக் காக்கப் புகுவதனினும் விளிதலே நன்றென இராமன் உணர்ந்தது உத்தமமே.

யாப்பிலக்கணம்

[846-வது பக்கத் தொடர்ச்சி]

வழு

யாப்பில் பயின்று வரலாகாக் குற்றங்கள் சில உள. அவற்றையறிந்து நீக்கிச் செய்யுளியற்றலே முன்னோர் மரபுடன் முரணாத முறையாகும். ஆதலின், அவை இவையெனப் பண்டைப் புலவர் வகுத்துக் கூறியுள்ளவற்றைக் காண்போம் :

செய்யுளுட் பயின்று வரலாகாத வழுக்கள் நான்கு வகையாம். அவை எழுத்து வழு, சொல் வழு, பொருள் வழு, யாப்பு வழு என்பனவாம்.

1. எழுத்து வழு:—எழுத்து வழுவாவது, எழுத்திலக்கணத்தோடு மாறுபட்டு வருவது. அஃதாவது, ஒரு சொல்லில் வேண்டாவிடத்து ஓர் எழுத்தமைவதெனக் கொள்க.

வெறிகமழ் தண்சிலம்பின் வேட்டமே யன்றிப்
பிறிதுங் குறையுடையான் போலுஞ்—செறிதொடீஇ
தேமான் இதணத்தா னமாக நம்புனத்தே
மாமான்பின் வந்த மகன்.

இச்செய்யுளில் 'தேமா' எனக் கூற வேண்டிய இடத்தில் 'தேமான்' என னகர ஒற்று அமைந்தமையால், எழுத்து வழுவாயிற்று.

2. சொல் வழு:—சொல் வழுவாவது, ஒரு சொல்லோடு அச்சொல்லுக்குப் பொருத்தமல்லாத மற்றொரு சொல்லைச் சேர்த்து வழங்குவதாம். அஃதாவது- பொதுப்பெயருக்குச் சிறப்புவினையும், சிறப்புப் பெயருக்குப் பொதுவினையும் கொடுத்து முடித்தல் முதலியனவாம்.

இசையெல்லாம் கோட்ட எழிற்றானை யூர்ந்து
வசையிலா மன்னர்வந் தேத்த—இசையும்
அடிசில் பருகி யணியார்த்துப் போந்தான்
கொடிமதிற் கோழியார் கோ

இச்செய்யுளில் உள்ள இசை, தானை, அடிசில், அணி என்பன முறையே பலவகை இராகங்களுக்கும், பல வகைப் படைகளுக்கும், பலவகை உணவுகளுக்கும், பல வகை ஆபரணங்களுக்கும் பொதுவான பெயர்களாம். இவற்றை முறையே ஆர்ப்ப, நாப்பண், அயின்று, அணிந்து என்னும் பொதுச் சொற்களைத் தந்து, இசை ஆர்ப்ப, தானை நாப்பண், அடிசில் அயின்று, அணி அணிந்து என அமைந்து நடக்கச்செய்தல் முறையாக, அங்ஙனமின்றிப் பொருந்தாச் சொ

ற்களைப் புணர்த்தியிருத்தலின், இச்செய்யுள் சொல் வழுவுடைத்தாதலை யறிக.

3. போருள் வழு:—பொருள் வழுவாவது, பொருளிலக்கணத்தோடு மாறுபடச் செய்யுளியற்றுதல். தமிழில் அகப்போருள் புறப்போருள் என்னும் ஒழுக்கப் பிரிவினை பற்றி நூல்கள் இயற்றப்படும். அவ்விரு வகைப் பொருளிலக்கண அமைதிக்கேற்ப நடை பெறுவதே தமிழ் நடையாம். அவ்வமைதி கெடச் செய்யுள் செய்வது பொருட் குற்றத்தின்பாற்படும்.

[சைவே

முன்னுந் தொழத்தோன்றி முள்ளெயிற்று யத்தி
இன்னுந் தொழத்தோன்றிற் றீதெகாண்-மன்னும்
பொருகளிமால் யானைப் புகழ்க்கிள்ளி பூண்போற்
பெருகொளியான் மிக்க பிறை.

பண்டிப் புனத்துப் பகலிடத் தேனலுட்
கண்டிக் களிற்றை யறிவன்மற்—றிண்டிக்
கதிரன் பழையனூர்க் கார்நீலக் கண்ணைப்
உதிர முடைத்திதன் கோடு.

இவ்விரு வெண்பாக்களும் அகப்பொருளிலக்கணத்தில் முறையே நாண நாட்டம், நடுங்க நாட்டம் என்னுந் துறைகளுக்குரியவைகளாம். இவை தலைவிக்குத் தோழி கூறுவது போல அமைந்துள்ளன. தலைவியிடத்தில் தோழியாவாள் நாணவும் நடுங்கவும் கூறுதல் மரபன்று. ஆதலின், இவை பொருட்குற்ற முடையனவாம்.

இனிப் பொருள் (அர்த்தம்) பொருத்தமின்றி அமையுஞ் செய்யுளையும் பொருள் வழுவுக்கு உதாரணங் காட்டுவதுண்டு.

வாளை மேய்ந்த வளைகோட்டுக் குதிரை
கோழிலை வாழைக் கொழுமட லுறங்கும்
ஊரன் செய்த கேண்மை
தேரை வாலினும் பெரிதா கின்றே.

இதில் குதிரை கோடு (கொம்பு) உடையதாதலும், அது வாளை மேய்தலும், வாழைமடலில் உறங்கலும் அசம்பாவிதமாம். தேரை வாலுடையதாதலும் அது போல்வதே. ஆதலின், இது பொருள் வழுவுடையதாயிற்று.

4. யாப்பு வழு:-யாப்பிலக்கணத்தோடு மாறுபடச் செய்யுளமைப்பது யாப்பு வழு எனப்படும்.

குமண வாழி குமண உமணருப்பிற்
றேய்கநின் பகையே யான்சில
பெருமை வேண்டி வந்தேன்
நீநின் பெருமை வேண்டிற்று.

இது முதலிற்றொடங்கிய ஓசையிற் கெட்டுப் பின்னர்க் கட்டுரையால் வந்தமையால், யாப்புவழு வாதலறிக.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[843-வது பக்கத் தொடர்ச்சி]

(3) ஆரிய சந்தங்களின் தமிழ்ப் பரிணும விருத்தி

மிகவும் இன்பத்துடன் நம்மவர் பாடும் தமிழ்ச்சந்தங்களில் சுந்தரராது நட்டராகச் சந்தம் ஒன்றும். அதன் யாப்பை ஆராய்வோம்:

பொன்னார் மேனியனே—
புலித்—தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்—
மிளிர்—கொன்றை யணிந்தவனே

என்பதில் தேமா, கூவிளங்காய், பின்னர் ஒரு நிரையசை, கூவிளம், கூவிளங்காயாய், நிற்கும்.வன்றொண்டர் தன்னைக்குறித்துக் கூறுங்கால் "நல்லிசை ஞானசம்பதனு நாவுக்கரசரும் பாடிய நற்றமிழ்மாலை, சொல்லியவே சொல்லி ஏத்து" என்று உரைத்திருத்தலால், அத்தகைய செய்யுள் சம்பந்தர் தேவாரத்திலும் உளவோ வெனின் சிலவுள. ஆயினும் அவை கௌசிகப் பண்ணெனக் காட்டப்பட்டிருக்கின்றன. அங்ஙனேயாகின், அவை சுந்தரர்தம் நட்டராகச்சந்தவிருத்தங்கள் போன்றன வென்னலாம்.

கையார் வெண்மழுவா - கனல் -
போல்திரு மேனியனே
மையா ரொண்கணல்லாள் - உமை -
யாள்வளர் மார்பினனே
செய்யார் செங்கயல்பாய் - திரு -
வான்மியூ* ருறையும்

ஐயா வுன்னையல்லா - லடை -
யாதென தாதரவே.

இதுவே, முதற்சீர் தேமா அல்லது புளிமாவாக நிற்குமாயினும் சந்தம் ஒன்றேயாகும். இதைச் சாதாரிப்பண்ணில் மாற்றி அப்பர் திருவங்கமாலை பாடுவது காண்க:—

தலையே நீவணங்காய் - தலை - மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்
கண்காள் காண்மின்களோ - கட - லஞ்சுண்ட
[கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ

இவ்வாறு பரிணமித்த இசையை ஆரியப்பண்ணென இடமில்லை. இவ்வாறே மற்றொரு ஆரிய சந்தத்தை நோக்குவோம். இனி குற்றுயிரீற்றுக் கூவிளச்சீரைந் தொடு அந்தத்தில் ஒரு நெடில் பெறுவது அஸ்வதி என்னும் சந்தக்கலித்துறை என்று கண்டோமன்றே. அந்தத்தில் நெடில் வருவது அவசியமில்லையென்று நீண்ட கூவிள மைந்தால் காந்தாரபஞ்சமப் பண்ணில் பல பகுதிகள் பாடியது காண்க:—

கேள்வியர் நாடொறும் ஓதுநல் வேதத்தர் கேடிலா
வேள்விசெய் யந்தணர் வேதியர் வீழிமி † ழலையார்
வாழியர்தோற்றமும்கேடும்வைப்பாருயிர்கட்கெலாம்
ஆழியர் தம்மடி போற்றியென் பார்கட்க ணியரே.

திருவீழிமிழலை - பண் - காந்தார பஞ்சமம் 1

* "கூவிளம் - கூவிளங்காய்" என வரவேண்டிய இடங்களில் கூவிளங்காய்க்கு ஒத்த நீண்ட கூவிளமும், புளிமாவும் வருமாயின் இசையில் சந்தம் பேதப்படாதென்பதற்கு இது ஒரு உதாரணமாகும். அல்லது 'மி' என்பதின் நாதத்தை 'மிஇஇ' என நீட்டிப்பாடினும் அலகு சரிவர நிற்கும்.

† 'ழ' என்பதை ழஅஅ எனப் பாடுக.

இதில் 5-வது சீரைநீக்கி, நான்குசீர்களாய் அப்பர் பாடியதை 4-ம் திருமுறையில் காணலாம்.

இனி ஆரிய சந்தமான மத்த மயூர விருத்தத்தை நமது சமயகுரவர் செந்தமிழில்‡பயன்படுத்தியிருப்பதை ஆராய்வோம். மத்தமயூரத்திற்கு இலக்கணம் "முன்னே தேமா, பின்னது தேமா, மொழி மூன்றில் துன்னுஞ் சீரே கூவிள நான்கிற் றுறுதேமா பொன்னே யைந்திற் புல்லிய சீரே புளிமாங்காய்' என்றார் விருத்தப்பாவிய லாசிரியர். திருஞானசம்பந்தர் இதை (திருவிராகம் பண் - கௌசிகத்தில் இரண்டு பதிகங்களில்) திருத்தி இசையை மேலாக்கித் திருவானைக்காவலிலும், திருவாலவாயிலிலும் பாடியது காணலாம்.

வானைக் காவில் வெண்மதி மல்கு புல்கு வார்சடை
தேனைக் காவி லின்மொழி தேவி பாக மாயினன்.

என்பதில் முதல் நான்கும் தேமா, தேமா, கூவிளம், தேமாவாய் 5-ம் சீராகிய புளிமாங்காய்க்குப் பதிலாய் ஒருமாச்சீரும் கூவிளமும் அமைத்து அறுசீர்ச் சந்தவிருத்தமாக்கியது காண்க.

[குறிப்பு:—இதில் "புல்கு - வார்சடை" ஒன்றுயெடுத்துக் கூவிளங்கனி யென்று கொள்ளல் சிறப்பன்று. வேறு உதாரணங்களை நோக்கின் ஆளுடைய பிள்ளையார் அறுசீர்விருத்தமெனக் கருதியதாகவே காணப்படுகின்றது]

பின்னும் ஆரியப்பண்ணாகிய வித்யுன்மாலை யென்னும் கலிச்சந்த விருத்தம் ("சீரே நீளும் தேமா முற்றும்") ஆளுடைய பிள்ளையார் கையில் வந்ததெனில், அது திருமாலைமாற்றென்னும் சித்திரக்கவியாய்ப் பதினொரு செய்யுள்கள் பின்வருமாறு பாடப்பட்டமை காண்க:—

யாமா மாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணா காமா காழீயா மாமா யாநீ மாமாயா

சீகாழி - பண் - கௌசிகம் - திருமாலைமாற்று 1.

இது சுத்தமான தமிழ் அறுசீர்விருத்த அலகான "இருமா காய்ச்சீ ரரையடிக்காய், இவையே மற்றை யரையடிக்கும்" என்னும் இலட்சணம் பொருந்தி நிற்பது காண்க:—

மாச்சீரும் கூவிளச்சீரும் மாறி மாறி வருதல் 'சம்மத' மென்னும் ஆரிய சந்தமாயின், ஒருமாச்சீரும் இரண்டு கூவிளச்சீரும் ஒரு அரையடிக்கு வரும் சந்த விருத்தங்களும், * ஒரு மாச்சீரும் மூன்று கூவிளச்சீரும் † அரை அடிக்கு வரும் சந்த விருத்தங்களும் புகலிவேந்தர் பதிகங்களிற் காணலாம். இவற்றை வடமொழிச் சந்தமெனக் கூடுமோ? அவ்வாறே கூவிளங்காய் வருவது ஆரிய சந்தமாயின், இரண்டு கூவிளம் ‡ ஒரு கூவிளங்காய் வருவது நமது சமய குரவர் தமிழ்ச்சந்தமே யாகும். ஆதலால் ஆரிய சந்தத்தை நினைப்பில் வைத்து நூதனமாகச் சிருஷ்டித்த சந்தங்கள் தமிழில் உள. அவ்வாறன்றி எப்பாஷையிலும் காணாத சந்தங்களையும் நமது சமயகுரவர்பாடுவதும் உண்டு. அவற்றினிலக்கணம் சிறிது காண்போம்.

‡. Vide pp 438 to 447 of Sambandar's Thevaram Saiva siddhanta mahasamajam editon.

இவ்வாறு பயன்படுத்தவல்ல இலக்கியச் சக்தியற்றவர் சமணரென்று புகலிவேந்தர் அவர்களை ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயனறிகிலா அந்தகர் என்று குறிப்பிடுவது காண்க.

* "ஓதி வாயதும் மறைகளே உரைப்ப
துபல மறைகளே" [கம்.
சம்பந்தர்-திருவீழிமிழலை, பண்-பழம்பஞ்சரம் திருவியம

† "பாயு மால்விடை மேலொரு பாகனே
பாவைதன்னுரு மேலொரு பாகனே"
திருக்கச்சியேகம்பம்-திருவியமகம்-பண்-பழம்பஞ்சரம்.

‡ "உற்றுமை சேர்வது மெய்யினமே
உணர்வது நின்னருள் மெய்யினையே"
சம்பந்தர்-திருக்கழுமலம்-பண்-பழம்பஞ்சரம்—
திருவியமகம்.

தமிழ்ப்பாடம் 98.

அஷ்ட பிரபந்தம்—திருவரங்கக் கலம்பகம்

[840-வது பக்கத் தொடர்ச்சி]

புலையாம் பிறவி பிறந்தென்செய் தோம்பொன்னி
[பொன்கொழிக்கு
மலையார் திருவரங் கத்தெம்பி ரானம தன்னையொடுந்
தொலையாத கானங் கடந்தவந் நாட்டடந் தோறும்
[புல்லாய்ச்
சிலையாய்க் கிடந்தில மேநெஞ்சமேகழ றீண்டுகைக்கே

பதப்பிரிவு:— புலை ஆம் பிறவி பிறந்து என் செய்தோம் பொன்னி பொன் கொழிக்கும் அலை ஆர் திரு அரங்கத்து எம் பிரான் நமது அன்னையொடும் தொலையாத கானம் கடந்த அ நாள் தடம் தோறும் புல் ஆய் சிலை ஆய் கிடந்து இலமே நெஞ்சமே கழல் தீண்டுகைக்கு ஏ.

பதவுரை.

நெஞ்சே-என்மனமே! புலை - இழிவு, ஆம்-ஆகிய, பிறவி - இந்த மனிதப்பிறவி, பிறந்து - பிறந்து, என் செய்தோம் - என்ன பயன் அடைந்தோம்! (ஒன்றுமில்லை; ஆகையால் இதனைவிட) பொன்னி - காவிரிநதியானது, பொன்-பொன்னை, கொழிக்கும் - கரையில் ஒதுக்குகின்ற, அலை - அலைகள், ஆர் - பொருந்திய, திரு அரங்கத்து - ஸ்ரீரங்கத்தில் உள்ள, எம் பிரான்-நமது பெருமான், (இராமனுக அவதரித்து) நமது - நம்முடைய, அன்னையொடும் - தாயாகிய சீதையுடைன், தொலையாத-முடிவற்ற, கானம் - காட்டினை, கடந்த - கடந்து சென்ற, அந் நாள் - அந்தக் காலத்தில், கழல் - அவரது திருவடிகளை, தீண்டுகைக்கு-தீண்டும்படி, தடம்தோறும்-அவர் நடந்த வழியெல்லாம், புல் ஆய் - புல்லாக வேனும், சிலை ஆய் - கல்லாகவேனும், கிடந்து இலமே - கிடக்காமல் போனோமே.

கருத்து:—நானே சென்று திருவரங்கநாதனது பாதங்களை அடையப் பெற்றிலேன். ஆதலின், இம் மனிதப்பிறவி எடுத்திருப்பதைவிடத் தண்டகவனத்தில் கல்லாய்ப் புல்லாய்க் கிடந்திருப்பேனாயின் எம் பெருமான் தானே வந்து தன் திருவடிகளைஎனக்குத் தந்திருப்பாரன்றோ! என்று கவி, தனக்குள்ளே நினைத்

தூக்கொள்வதைத்தான் தன் நெஞ்சொடு பேசுவது போல் பாடியிருக்கின்றார்.

குறிப்பு:—மனிதப்பிறவியை விட, புல்லும் கல்லும் தாழ்ந்தனவாயினும், அந்தத் தாழ்மையை அடைவதில் தனக்குப் பயன் பெரிதுண்டு என்று மதித்து, அதனை அடைய வேண்டுவதால், இந்தச் செய்யுளில் வேண்டல் அணி அமைந்திருக்கின்றது. வடமொழியில் இவ்வணியை அநுக்ஞாலங்காரம் என்பர். ஒரு குற்றம் அல்லது தாழ்மையில் நன்மை இருக்கின்றது என்று மதித்து, அக்குற்றம் அல்லது தாழ்மையை அடைந்தேனும் அதனால் வரும்நன்மையை அடையவேண்டும்என்று கூறுவதுஇவ்வணியின் இலக்கணம். முன் திருவரங்கத் தந்தாதியில், 'வாராக வாமனனே' என்னும் செய்யுளில்(6 வால்யூம் 801 வது பக்கம்),'மன்மதனும் மடவாராக ஆதரம் செய்வன்' என்று கூறியிருப்பதும் வேண்டலணியே. மன்மதனாகிய கடவுள் ஒரு மடவாள் ஆகவேண்டும் என்பது, தான் இருப்பதனினும் தாழ்ந்த நிலையை அடைய விரும்புவதாம்; அவ்வாறு தாழ்வதால் திருமாலைத் தழுவலாம் என்ற நன்மையைப் பெறவிருத்தலால் அதை விரும்புவதாகக் கூறப்பட்டிருக்கின்றது. செல்வமுடைய வாழ்வில் அமிழ்ந்திருக்கும்பொழுது மாந்தர் கடவுளை நினைப்பதில்லை; துன்பப்படும்போது தெய்வத்தை நினைக்கின்றனர்; என்னும் இந்த இயற்கையை மனத்திற்கொண்டு ஒருவன், "கடவுளே, நின் நினைவு என்னைவிட்டு அகலாதிருக்கும் வண்ணம் எனக்கு எப்பொழுதும் துன்பத்தையே கொடுத்துக்கொண்டிரு" என்று பிரார்த்திப்பானாயின், தெய்வஸ்மரணை என்ற நன்மை அடையும்பொருட்டுத் துன்பமாகிய குற்றம் வேண்டப்படுவதால், அது வேண்டலணியாகும்.

—

வாயினி ரங்கினை யாரமெ றிந்தனை வால்வளை
சிந்தினைதண்
பாயலை யுந்தினை மாலைய டைந்தனை பாரிலு
றங்கிலையால்
கோயிலு ரங்கனை மாகன கந்திகழ் கோகன
கம்பொலியு
மாயிழை நண்பனை நீயும்வி ரும்பினை யாகுமெ
டுங்கடலே. 7.

பதப்பிரிவு:—வாயின் இரங்கினை ஆரம் எறிந்தனை வால் வளை சிந்தினை தண் பாய் அலை—பாயலை உந்தினை மாலை அடைந்தனை பாரில் உறங்கிலை ஆல் கோயில் அரங்கனை மா கனகம் திகழ் கோகனகம் பொலியும் ஆய் இழை நண்பனை நீயும் விரும்பினை ஆகும் நெடும் கடல் ஏ.

பதவுரை.

நெடும் - பெரிய, கடலே - சமுத்திரமே,

(நான்தான், வாயின் இரங்குகின்றேன் - வாயால் புலம்புகின்றேன்; ஆரம் எறிகின்றேன் - மாலையை அகற்றிவிடுகின்றேன்; வால் வளை சிந்தினேன்-வெண்மையான கைவளைகளை உகுத்துவிடுகின்றேன்; தண் பாயலை உந்தினேன் - குளிர்ந்த மலர்ப்படுக்கையைத் தள்ளிவிடுகின்றேன்; மாலை அடைந்தேன் - காமத்தை அடைந்துளேன்; பாரில் உறங்கிலேன் - பூமியில் நித்திரை கொண்டிலேன்), அரங்கனைக் காதலித்த விரக தாபத்தால் நான் இப்படி எல்லாம் செய்ய என்னைப் போலவே நீயும்,—

வாயின் - நீ இருக்குமிடத்தில், இரங்கினை - ஆரவாரம் செய்கின்றாய்; ஆரம் - முத்துக்களை, எறிந்தனை - எறிகின்றாய்; வால் - வெண்மையான, வளை- சங்குகளை, சிந்தினை - சிந்துகின்றாய், தண் - குளிர்ந்த, பாய் - பாய்கின்ற, அலை-அலைகளை, உந்தினை - தள்ளுகின்றாய்; மாலை-பெருமையை (அல்லது கருமையை) அடைந்தனை - பெற்றிருக்கின்றாய்; பாரில் - பூமியில், உறங்கிலை - தூக்கமின்றிப் பரண்டவண்ணமாயிருக்கின்றாய், (ஆல், அசை), (ஆகையால்)

நீயும் - நீயுங்கூட, (என்னைப்போல) கோயில் அரங்கனை - திருவரங்கக்கோயிலில் இருப்பவனும்; மா - சிறந்த, கனகம் - பொன்னிறமுள்ள, திகழ் - பிரகாசிக்கின்ற, கோகனகம் - செந்தாமரையில், பொலியும் - விளங்கும், ஆய் இழை - ஆய்ந்தெடுத்த ஆபரணங்களை யணிந்த இலக்குமியின், நண்பனை - நாயகனும் ஆகிய திருமாலை, விரும்பினை - காதலித்தவள், ஆகும் - ஆகவேண்டும்.

கருத்து:—கவி தன்னை அரங்கனது காதலியாகப் பாவித்துக்கொண்டு தன் நிலைமையையும் கடலின் நிலைமையையும் ஒப்பு நோக்கி, "வேட்கை மிகுதியால் நான்தான், திருமகளுக்கு நாயகனாயிருக்கின்றான் என்பதையுங் கருதாமல் அரங்கனைக் காதலிக்கின்றேன் என்றால், ஏ, கடலே, நீயுமா காதலிக்க வேண்டும்" என்று கூறுகிறார்.

குறிப்பு:—காமநோயுடைய ஒருத்தியும் கடலும் ஒன்றானது சிலேடையினால் இதனில் 'பாயலை' என்பது பிரிமொழிச்சிலேடை. மற்றவை செம்மொழிச் சிலேடை. பாயலை என்பது இரண்டாம் வேற்றுமை உருபு விரிந்த பெயர்ச்சொல் ஒன்றாகிப் 'படுக்கையை' என்ற பொருளில் காதலிக்குப் பொருந்தும்: அதனையே,பாய் + அலைஎன இரண்டுசொற்களாய்ப் பிரித்துப் 'பாய்கின்ற அலை' என்று பொருள்பட வினைத்தொகையாய்க் கொண்டால், கடலுக்குப் பொருத்தலாம். சிலேடையின் இலக்கணவகைகளைப்பற்றித் திருவேங்கடமாலைப் பாடங்களில் விளக்கியுள்ளோம். கடலின்பால் தானே நிகழ்கின்ற நிகழ்ச்சிகளுக்குக் கவி தன்னுடைய கருத்தைச் சார்த்தியிருப்பதால், இச்செய்யுள் தற்குறிப்பேற்றவணி; அவ்வணி இங்குச் சிலேடைபற்றி வந்திருக்கின்றது.

—

சீரி ருக்கமட மங்கை யீர்கிளிக
டாமி ருக்கமது கரமெலா
நிறைந்தி ருக்கமட வன்ன முன்னநிரை
யாயி ருக்கவுரை யாமல்யா
னிருக்கினுமென் னெஞ்ச மல்லதொரு
வஞ்ச மற்றதுணை யில்லையென்
றுத ரத்தினொடு தூது விட்டபிழை
யாரி டத்துரைசெய் தாறுவேன்
சீரி ருக்குமறை முடிவு தேடரிய
திருவ ரங்கரைவ ணங்கியே
திருத்து ழாய்தரின்வி ரும்பி யேகொடுதி
ரும்பி யேவருத லின்றியே
வாரி ருக்குமுலை மலர்ம டந்தையுறை
மார்பி லேபெரிய தோளிலே
மயங்கி யின்புறமு யங்கி யென்னையும
றந்து தன்னையும றந்ததே. 8.

பதவுரை.

மட - இளமை பொருந்திய, மங்கையீர் - என் தோழிப் பெண்களே! நீர்-நீங்களெல்லாரும், இருக்க -இருக்கவும், கிளிகள் தாம்-கிளிகள் எல்லாம், இருக்க -இருக்கவும்; மதுகரம் - வண்டுகள், எல்லாம் - எல்லாம், நிறைந்து - நிறைந்து, இருக்க - இருக்கவும்; மட - இளமைபொருந்திய, அன்னம் - அன்னங்கள், முன்னம் - எனக்கெதிரில், நிரை ஆய் - வரிசை ஆய், இருக்க - இருக்கவும்,

உரையாமல் - (உங்கள் ஒருவரையும் நம்பித் தூது போக) சொல்லாமல், யான் - நான், ஆர் இருக்கினும் - யார் இருந்தபோதிலும், என் - என்னுடைய, நெஞ்சம் - மனது, அல்லது - தவிர, ஒரு - ஒரு, வஞ்சம் - வஞ்சனை, அற்ற - இல்லாத, துணை - துணை, இல்லை என்று - எனக்கு இல்லையென்று நினைத்து, ஆதரத்தினொடு - மிகுந்த அன்போடு, தூது விட்ட - (அந்த மனதைத் திருவரங்கன்பால்) தூது அனுப்பிய, பிழை - குற்றத்தை, யார் இடத்து - யாரிடத்தில், உரை செய்து - சொல்லி, ஆறுவேன் - துன்பந்தணிவேன்:—(ஏனெனில், என் மனமோ முழுமோசம் செய்துவிட்டது. எவ்வாறென்றால்—)

சீர் - சிறப்பு, இருக்கும் - பொருந்திய, மறை - வேதங்களாலும், முடிவு - முடிவு, தேட - தேடுவதற்கு, அரிய - இயலாத, திருஅரங்கரை - ஸ்ரீரங்கநாதரை, வணங்கி - தொழுது, (அவர்) திருத்துழாய்- துளசியை, தரின் - (என் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக) கொடுப்பாரானால், விரும்பி - விருப்பத்தோடு, கொடு - அதனைப் பெற்றுக்கொண்டு, (நான் சொல்லியனுப்பியபடி) திரும்பியே - திரும்பி, வருதல் - வருவது, இன்றியே - இல்லாமலே,-(அம்மனமானது)—

வார் - தோல்கச்சு, இருக்கும்-பொருந்திய, முலை - முலைகளையுடைய, மலர்மடந்தை - தாமரையில் வசிப்பவளாகிய இலக்குமி, உறை - தங்கியுள்ள, மார்பிலே - அவரது மார்பிலும், பெரிய - பெரிய, தோளிலே - தோள்களிலும், மயங்கி, - காமமயக்கங் கொண்டு, இன்பு உற - இன்பம் உண்டாக, முயங்கி - அணைத்துக்கொண்டு, (அந்த ஆநந்தத்தால்) என்னையும் - தூதனுப்பிய என்னையும், மறந்து - மறந்துவிட்டு, தன்னையும் - தூதாகச் சென்ற தன்னையுமே, மறந்த- தே -மறந்துவிட்டதே—(நானினி என்ன செய்வேன்)

கருத்து:—தன்னுடைய மனம் எப்பொழுதும் திருவரங்கனிடத்திலே தங்கியிருக்கின்றதென்பதையும், அதனால் தான் ஆனந்தப் பரவசராகி யிருப்பதையும் பிள்ளைபெருமாள் ஐயங்கார் இவ்வண்ணம் நெஞ்சு விடுதூது என்னுந் துறையில் அமைத்து அழகாகப் பாடுகின்றார்.

விரிவுரை:—தோழிமாரும் தன்னைப்போன்ற பருவ மங்கையர் ஆதலால், கண்டவர்மனங் கவரும் அழகுடைய திருவரங்கனிடத்தில் அவர்களைத் தூதனுப்பினால் அவர்களை மோகங்கொண்டு தன்காரியத்தைக் கைவிட்டுவிடுவார்களோ என்று அயிர்த்தும்: சொன்னதைத்தான் சொல்லுமே அல்லாது சமயோசிதமாய்த் தன் சுயபுத்திகொண்டு பேசித் திருவரங்கரை இணங்கச்செய்யும் சக்தியில்லாக் கிளிகளை அனுப்பிப் பயனில்லையென்றும், கட்குடியரை நம்பி ஒரு காரியத்திற் கனுப்புவது மதியீனமென்று வண்டுகளை அனுப்பத் துணியாமலும், பிரிக்கமுடியாத பாலையும் நீரையுமே பிரிக்கும் தொழிலையுடைய அன்னத்தை அனுப்பினால் அது தன் நுணத்தையே அங்குக் காட்டிக் கூட்டிவைக்காமற் போகுமோ என அஞ்சியும் அவைகளைத் தூது அனுப்பாமல் தன் நெஞ்சையே தனக்கு வஞ்சமற்ற துணை என்று காதல்தூது போக்கினர் கவி.

குறிப்பு:—இன்றைய பாடத்து மூன்று செய்யுள்களிலும் வந்துள்ள குற்றியலுகர ஈற்றுப் புணர்ச்சிகளையெல்லாம் தேடியெடுத்துப் பயிற்சிசெய்துகொள்வது நலம்.

—

159172

இலக்கணம்.

நிலைமொழியீற்றில் இருப்பது குற்றியலுகரமாயின் அது வருமொழிமுதல் உயிரோடு புணரும்போது கெட்டுப்போய்விடநின்ற மெய்யின்மேல், வருமொழி முதல்உயிர் ஏறிக்கொள்ளும் என்றும், நிலைமொழியிற்றிலிருப்பது முற்றியலுகரமாயின் அவ்வுகரம்வருமொழிமுதல் உயிரோடு புணரும்போது கெடாமல், 'ஏனையுயிர் வழி வவ்வும்' என்ற விதிக்கு இணங்கி வகர உடம்படுமெய் வர, அவ்வுடம்படு மெய்யின் மேல் வருமொழி உயிர் ஏறலாகும் என்றும், உகர ஈற்றுச்சொற்கள் உயிரோடு புணர்கின்ற இலக்கணத்தைப் பொதுவகையில் இதுவரையில் கண்டோம்:—

i நாடு + அடைந்தான் = நாடு + அடைந்தான்
= நாட் + அடைந்தான்
= நாடடைந்தான்.
அழுது + இறந்தாள் = அழுத் உ + இறந்தாள்
= அழுத் + இறந்தாள்
= அழுதிறந்தாள்.

குற்றியலுகரத்திற்குப் பிறகு உயிர் வந்ததால், அது கெட்டு,வருமொழிமுதல் உயிர்,நிலைமொழியிறுதியில் எஞ்சி நின்ற மெய்யின்மேல் ஏறியது.

ii கொணு + அமர்ந்தான் = கொணு வ் + அமர்ந்தான்
= கொணு வமர்ந்தான்.
உரு + இல்லை = உரு வ் + இல்லை
= உருவில்லை

முற்றியலுகரத்திற்குப்பிறகு உயிர்வர அதுகெடாமல் வகர உடம்படுமெய் வந்தது.

இவ்விரண்டு விதிகள் பெரும்பான்மை உகர வீற்றுச் சொற்களுக்கெல்லாம் பொருந்துமாயினும் சிற்சில சொற்கள் மாத்திரம் இவ்விதிகளுக்கு இணங்காமல் புணர்வதும் உண்டு.

i முற்றியலுகரமும் குற்றியலுகரத்தைப்போல் கெட்டு, அது நின்ற மெய்யின்மேல் வருமொழி முதல் உயிர் ஏறலாவதையும் காணலாம். அவ்வாறு வது, பின்வரும் சொற்களில் நேர்கின்றது:—

i 'ஏழு' என்னும் சொல்லின் ஈற்றிலுள்ள உகரம், ழ் என்னும் இடையின மெய்யில் ஏறியிருப்பதால் முற்றியலகரம் ஆகும். ஆயினும், அது வருமொழி முதல் உயிரோடு புணரும்போது பொதுவிதியின்படி வகர உடம்படுமெய் பெறாமல், குற்றியலுகரத்தைப்போல் கெட்டுவிட, வருமுயிர் அந்த மெய்யின் மேல் ஏறிக்கொள்கின்றது.

ஏழு + இலை = ஏழ்உ + இலை = ஏழ் + இலை = ஏழிலை.
ஏழு + உலகம் = ஏழ்உ + உலகம் = ஏழ் + உலகம் =
ஏழுலகம்

'ஏழு' என்ற சொல்லிற்குமாத்திரம் இவ்விலக்கணம் பொருந்தும். இதனிலிருந்து, ழ் என்னும் மெய்யின்மேல் ஏறி முடிகின்ற முற்றியலுகரங்கள் எல்லாம் இவ்வாறு குற்றியலுகரம்போலவே புணரும் என்று கொள்ளலாகாது;

மழு + ஏந்தி = மழுவ் + ஏந்தி = மழுவேந்தி

என மற்றச் சொற்கள் உடம்படுமெய் பெற்றே புணரும்.

ii. கரவு உறவு கனவு கதவு களவு உழவு மகவு உதவு, என்பனபோல் வ் என்னும் இடையின மெய்யின்மேல் ஏறிமுடிகின்ற முற்றிய லுகரங்கள் எல்லாம், வருமொழி முதல் உயிரோடு புணரும்போது குற்றியலுகரம்போலக் கெடுகின்றன.

கதவு + ஆடியது = கதவ்உ + ஆடியது = கதவ் + ஆடியது = கதவாடியது.

மகவு + அழுதது = மகவ்உ + அழுதது = மகவ் + அழுதது = மகவழுதது.

உதவு + என்றான் = உதவ்உ + என்றான் = உதவ் + என்றான் = உதவென்றான்.

எனவே, ஏழு என்னும் சொல்லும், வு என்னும் எழுத்தில் முடிகின்ற சொற்களும், முற்றியலுகரங்களாக இருந்தாலும், உடம்படுமெய் பெற்று வருமொழி முதலுயிரோடு புணரா; அவ்வாறு புணர்த்தினால் பிழையாம். ஏழரசர், என்பதே நேர், ஏழுவரசர் என்பது பிழை. உறவில்லை, என்பதே நேர், உறவுவில்லை என்பது பிழை.

iii. அது இது எது என்ற சொற்களின் ஈற்றில் உள்ள உகரம் வல்லின மெய்யின்மேல் ஏறியிருந்தாலும் (அச்சொற்கள் இரண்டு குறில்களால் ஆனவையாதலால்) முற்றியலுகரம் ஆகும். இந்த உகரம் வருமொழி முதல் உயிரோடு புணரும்போது, முற்றியலுகரம்போல் வகர உடம்படுமெய் பெற்றேனும், குற்றியலுகரம்போல் கெட்டேனும் இருவிதமாகவும் புணரலாம். இரண்டும் பிழை இல்லை.

இது + இல்லை = இதுவ் + இல்லை = இதுவில்லை.
அல்லது, இத்உ + இல்லை = இத் + இல்லை = இதில்லை.

அது + ஒரு = அதுவொரு, அல்லது அதொரு

எது + அறம் = எது வறம், அல்லது, எதறம்

செய்யுளில், அது + அன்று, என்று சேரும்போது, நிலைமொழியீற்று உகரம் கெடுவது மல்லாமல், வருமொழி முதல் அகரம் ஆ என்று நீண்டு பிறகு, அந்த மெய்யின்மேல் ஏறும்.

[எனினும், அஃதன்று, இஃதில்லை, என ஆய்தம் விரிந்து. புணர்தல் நேரிதாம்.]

அது + அன்று = அத்உ + அன்று, அத் + அன்று = அத் + ஆன்று = அதான்று.

II. முற்றியலுகரங்களும் சிற்சில சொற்களில் குற்றியலுகரம்போல், உயிர்வரக் கெடுவதைக்கண்டோம். இனிக் குற்றியலுகரங்களும் கெடாமல் முற்றியலுகரத்தைப்போல் உடம்படுமெய் பெற்றுப் புணரவும் நேர்கின்றது.

i. சிற்சில சமயங்களில், செய்யுள்களில், குற்றியலுகரத்தை ஈற்றிலுடைய சொற்களோடு ஏ, உம், முதலிய இடைச்சொற்கள் சேருங்கால், ஓசையின்பம் நோக்கி, அந்தக் குற்றியலுகரம், பொதுவிதியின்படி கெடாமல் நின்று முற்றியலுகரம்போல் உடன்படுமெய் பெற்றுப் புணரும்.

அடைவது + ஏ = என்பது சாதாரணமாய் அடைவதே எனப் புணரும். ஆனால் திருவரங்கத்தந்தாதி 26-வது செய்யுளில் அது, அடைவது + ஏ = அடைவது வ் + ஏ = அடைவதுவே, எனப் புணர்ந்திருக்கின்றது.

கொண்டது + ஏ = கொண்டதுவே—(சிலப்பதிகாரம் கானல் வரி. 13-வது செய்யுள்)

அடைவதுவே, கொண்டதுவே என்று எழுதினாலும் செய்யுளிற் பிழையாகாதென்றபோதிலும் சாதாரணமாக, அடைவதே கொண்டதே என்றுதான் புணரவேண்டும்.

இப்படியே, சிற்சில இடங்களில், உடுப்பது + உம், உண்பது + உம், உடுப்பதும் உண்பதும் என்னக் குற்றியலுகரம் கெட்டுப் புணராமல், உடுப்பதுவும், உண்பதுவும் என்று உடன்படுமெய் பெற்றுப்புணர்ந்திருக்கவுங் காணலாம். (கம்பர்)

இவ்வாறு இருவிதமாகவும், த் என்னும் வல்லின மெய்யின்மேல் ஏறி முடிகின்ற குற்றியலுகரங்களே புணர்கின்றனவேயன்றி, மற்றவல்லினமெய்யின்மேல் ஏறியிருக்கின்ற குற்றியலுகரங்கள் புணரக்காணோம். சு, டு, பு, று, என்று முடிகின்ற சொற்கள் எப்பொழுதும் குற்றியலுகரங் கெட்டே புணர்கின்றன; உடன்படுமெய் பெறுவதில்லை.

ii குற்றியலுகரம் என்பது தமிழ்மொழி இலக்கணத்திற்கே உரிய ஓர் எழுத்து. ஆதலால், சம்பு சாம்பு, சுயம்பு, ஹேது, போன்ற சமஸ்கிருத பதங்களின் ஈற்றிலுள்ள உகரங்கள், வல்லின மெய்யின்மேல் ஏறியிருந்தாலும், குற்றியலுகரங்கள் ஆகா. எனவே, வருமொழி முதல் உயிரோடு புணரும்போது அவை கெடாமல், உடம்படுமெய்யே பெறும்.

சுயம்பு + ஏ = சுயம்புவே (தாயுமானவர்)
சாம்பு + அன்று = சாம்புவன்று—(கம்பர்)
(சாம்பு - பறை)
ஹேது + ஆய் = ஹேதுவாய் (நளவெண்பா)
(ஹேது - காரணம்)

ஹேது என்னும் வடமொழி தமிழில் 'ஏது' என எழுதப்படுகின்றது. ஆனால் 'ஏது' என்று வினவுகின்ற இயற்கைத் தமிழ்ப்பதமும் வேறு இருக்கின்றது. எனவே, இந்தப் பதம், காரணம் என்ற அர்த்தத்தில் வருமானால், வடமொழியாய் நின்று உடன்படுமெய் பெறும் :—

இச்செயல் நரகத்திற்கு ஏது + ஆகும் = ஏதுவாகும். (ஏதாகும் என்பது பிழை.)

மற்று, ஏது, (என்ன என்ற பொருளில் வரும்) தமிழ் மொழியானால் உகரம் கெடும் :—

அவன் கதி ஏது + ஆகும் = ஏதாகும்.
ஏதுவாகும் என்று இங்கு எழுதுவது பிழை.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

காற்று மழை

Shakespeare—"The Tempest"

ஆராய்ச்சி

[851-வது பக்கத் தொடர்ச்சி]

சீர்மிகு செல்வி மிராண்டாவின் நாயகன் ஆதற்குப் பர்டினண்ட் உரியவனல்லாதான் அல்லன். மெல்லிய இசைகள்பாடி ஏரியல் இக் காதலனைக் களத்தினுள் அழைத்துவருகின்றது. தந்தையைக்குறித்த துயரமே அவனுக்கோர் வனப்பு நல்க, தன்னை அழைத்து வரும் அவ்வின்னிசையின் தெய்வமே என்ன மிராண்டாவைக் கண்ணுற்றான். வருமவனை ப்ராஸ்ப்பீரோ தன் புதல்விக்குக் காட்டி,

> நின்கண்ணின் குஞ்சத் திரையினைப் போக்கி ஆண்டு யாது காண்கின்றனை சொல்?
>
> —அங்கம் 1. களம் 2. பக்கம் 376.

எனக் கேட்டது, ஒரு அருமைத் தந்தையின் பெருமிதக் களிப்பினைச் செவ்விதின் உணர்த்துகின்றது. எதிர்வரும் உருவம் பெருமையால் தெய்வத்தையே ஒக்குமெனத் துணிகின்றாள். அவளையும் அன்னவாறே எண்ணினனுப் அண்மிய அச்செம்மல், வியப்பும் வினயமுமே கலந்த மொழிகளால் வினவத்துவக்கிப் பின், "ஓ விந்தையே, நீயோர் வனிதையோ அல்லையோ", எனக் காதற்கடலினுள் பாய்வானுகின்றான். பாய்ந்த அவன் அதனைவிளம்புதற்குரிய சொற்கள் காணுமல் உழலவில்லை—

> ஓ, கன்னியே யாயின், உனது ஆசை வேறேநாடிச் சென்றிலதாயின், உன்னையான்நேப்ல்ஸிற்கு அரசியாக்குவேன்.
>
> —அங்கம் 1. களம் 2. பக்கம் 394

இதனை உரைக்கும்போது, தன் தந்தை அன்றே இறந்தனன் என்பதை நினைத்திலன்: அவள் அருகு ஒருமுதியோன் நின்றனன் என்பதையும் மதித்திலன். மிராண்டாவைக் கண்டவுடன் தன் துயரினைத் துறந்தனன். எனினும், அவனுக்கு இன்னும் தன் நினைவு மறக்கவில்லை—

> என் மொழியே! அடகடவுளே! இது பேசுமிடத்தில் மாத்திரம் இருந்தேனாயின் இம்மொழியைப் பேசுகின்றவர்களுள் தலைவன் நான்.
>
> —அங்கம் 1. களம் 2, பக்கம் 394

தன் இதயத்தையே அம்மாதராள் காதலால் ஆட்சி கொள்பவளாகின்றாள் என்பதை உணர்தலின்றியே அவளை இவன் வேறோர் நேப்ல்ஸிற்கு அரசியாக்க வாக்களிக்கின்றனன். பின்னர்த் தெரிகின்றது தன் தன்மையின் மெய்ம்மை.

காதலின் இயல்பினை இவ்விரு காதலர்களும் தம் ஒழுக்கத்தால் செவ்விதின் காட்டுகின்றனர். அதனைக் காணுமுன் மற்றொன்றுஇங்கு உரைத்தல் நலம். இந் நாடகத்தினுள் பொன்னிழை நெய்ததுபோல் ஆங்காங்கு ஒளிர்கின்ற கருத்துக்கள் இரண்டு. அவைகளில் ஒன்று பொறுமையின் பெருமை. அதனை முன்னரே இங்கு விளக்கியுள்ளோம். உண்மையில் மனிதனுக்கு விடுதலையென்பதெல்லாம் ஊழியத்தில் தான் அடங்கி யிருக்கின்றதென்னும் கருத்து மற்றையது. மனிதவுணர்வினால் தீண்டப்பெறாத ஏரியல் வேலையை வெறுத்து விடுதலை வேண்டிவேண்டி நெட்டுயிர்ப்பு வீங்கக் காண்கின்றோம். தன் பெருந்தகைத் தலைவன்பால் அது அதிகமும் மதிப்பு வைத்துளது உண்மையே; அவன் இட்டவேலைகளை ஊக்கமுடன் செய்கின்றது.

> வாழி, வாழி, கெழுதகைத் தலைவா வாழி! சீரிய ஐயனே, சிறந்து வாழி! விழுமிய நின் விருப்பினை நிகழ்த்துதற்கு யான் வந்துளேன். பறக்கவோ, நீந்தவோ, தீயினுள் மூழ்கவோ, சுருள்தரு முகிலின்மீ தூரவோ—கடியநின் ஆணைக்கு ஏரியலையும் அதனுடைத் திறமை யத்தனையும் பூட்டுவாய்.
>
> —அங்கம் 1. களம் 2. பக்கம் 195.

எனினும், ஏரியல் மனிதனைஅன்றாதலின், மனிதருக்கே உரிய இரக்கம் நன்றி அன்பு முதலியவைகளைக் கொள்ளுந்தன்மை அந்த ஆவியின் இயற்கையில்இல்லை. அலான்ஸோவும் அவனுடன் வந்தவர்களும் படுகின்ற கஷ்டத்தைப் பார்த்து, தான்மனிதனாயின் தன் மனம் இளகும் என்று சாற்றியதே யொழியத் தான் மனம்இரங்கியதென்று கூறுமையை மறத்தலாகாது. "இரக்கம் என்பதன் தன்மை இன்னதென யானறிவேன், ஆயினும் யான் மனிதன் அல்லேனாதலின், யான் அவ்விரக்கத்தைக் கொள்ளமாட்டாதவன். மற்று, மனிதனாகிய நீயேனுங் கொள்" என்னுங் குறிப்புடைத்து அவ்வாசகம். ஸைக்கொராக்ஸினால் தான் பட்ட துன்பமும் அதனின்று ப்ராஸ்ப்பீரோ தன்னை விடுவித்ததும் அறிகின்றதாயினும், அந்த நன்றியை இவ்வேரியல் கொண்டாடியதாகத் தெரியவில்லை. அதனை ப்ராஸ்ப்பீரோ நினைவுபடுத்தியபோது, "தலைவ நினக்கு வந்தனம்" எனவோர் மரபுச்சொல் வினயத்தை வழங்கியதன்றி, நன்றிகூர்ந்த உள்ளமே உவந்தளித்த வந்தனம் அன்று அது. இந்த வந்தனமும், அதன்பின் ப்ராஸ்ப்பீரோ,

> இனி நீ முணுமுணுப்பாயாயின் கருங்காலி மரத்தைக் கிழித்து, பன்னிரு மாரி நீ ஊளையிட் டொழிக்கும்வரை அதன் கணுவுடைக் குடர்களில் உன்னைக் கடாவி விடுவேன்.
>
> —அங்கம் 1, களம் 2, பக்கம் 275

என்று அச்சுறுத்தியபோது,

> தலைவ, பொறுத்தருள்க. நின் ஏவலுக் கேற்றவாறு இணங்கி, என் ஆவித் தொழிலை அமைதியுடன் செய்வேன்.
>
> —அங்கம் 1, களம் 2, பக்கம் 293

என்று பணிந்ததும், ப்ராஸ்ப்பீரோவினிடமிருந்து தன் விடுதலையைப் பெற்றுக்கொள்ளும் உபாயங்களே அல்லாமல் அவ்வினயமும் பணிவும் அன்பினால் தூண்டப்பெற்றவைகள் ஆகா. இந்நாடகத்தின் இறுதி வாசகமாக,

> என் ஏரியல், கண்ணே, இது உன் காரியம். அதன்பின் காற்றொடு கலந்து, விடுதலை யடைவாய், நல்விடை கொள்க.
>
> —அங்கம் 5, களம் 1, பக்கம் 313.

என்று ப்ராஸ்ப்பீரோ அருமையோடு நல்விடை கொடுத்தபோது தான்வேண்டிய விடுதலையைப்பெற்றுவிட்டபடியால் எதிர்வினயம் ஒன்றும் இவ்வேரியல் உரைக்க நினைத்திலது. இதன் குணமறிந்தே ப்ராஸ்ப்பீரோவும் வேலையிடும்போதெல்லாம், "இதன்பின் விடுதலையடைவாய்," "விரைவில் விடுதலையடைவாய்", என்று

வாக்களித்து அதற்கு ஊக்கம் ஊட்டுகின்றான். ஒரு முறைஅவ்வாறுஉரைத்தது கேட்டு மகிழ்ந்தஏரியல்—

யாவயி னுறியுந் துய்ப்
அவ்வயி னுறிவென் யானும்
பூவினற் கிண்ணத் தூடு
புரிந்துநான் தங்க லாவேன்
கூவுமே லாந்தை யானே
அங்ஙனே பதுங்கிக் கொள்வேன்
வாவலின் முதுகி லேறி
வேனிற்பின் களித்துச் செல்வேன்
கிளைகளிற் ருெங்கு மலர்களி னகவயின்
களிமிகக் களிமிக வாழ்குவன் நானே.

—அங்கம் 5. களம் 1. பக்கம் 732.

என்னும் அவ் வழகிய பாட்டினுள் தன் உவகையை விளம்பியகாலத்தும், ப்ராஸ்ப்பீரோவின் நினைவைத் தான் நன்றியுடனேனும் அன்புடனேனும் போற்றி வாழ்நினைத்துளது என்பதைக் குறிக்கத்தகுந்தசொல் ஒன்றேனும் சேர்க்கவில்லை. இப்பாட்டினை நயந்து கேட்ட ப்ராஸ்ப்பீரோ,

ஆகா, இதுவன்றே என் மதுர எரியல்! நீயின்றிக் குறைகூர்வேன் நான். எனினும் உன் விடுதலையை நீ அடையக்கடவாய்.

—அங்கம் 5, களம் 1, பக்கம் 732.

எனப் பரிவுடன் பாராட்டித் தன் அன்பினைத் தெரிவித்தவிடத்தும் அவ் வேரியல், "நானும் அவ்வாறே நின்னைப் பிரிந்தபின் மிக வருந்துவேன்" என அன்பு மொழி எதிர்பகர்ந்திலது. இதனால், எரியல் ப்ராஸ்ப்பீரோவின்பால் அன்புதான் கொள்ளப்படாதென்று வெறுத்திருந்ததென எண்ணலாகாது. மனிதனல்லாத ஏரியலிற்கு அன்புகொள்ளும் இயற்கையில்லை. ப்ராஸ்ப்பீரோவின்பால் அன்புவைக்கவேண்டுமென்று ஆசைப்படுகின்றதென்றுங் கூறலாம். அன்பென்பது இன்னதென்பதும் அதற்குத்தெரியும். ஆயினும், அன்பினது இயக்கம் அதனிடம்செல்வதில்லை. இந்தக் குறையைஏரியல்அறிந்தும்இருந்தது. தன்னுல் காட்டமாட்டாத இரக்கத்தைக்காட்டும்படி ப்ராஸ்ப்பீரோவைத் தூண்டியதுபோன்றே, தான் வைக்கமாட்டாத அன்பைத் தன்னிடத்திலேனும் அவன் வைக்கவேண்டுமென அவாவி"என்பால்அன்புடைமையோ,தலைவ, அல்லையோ" (அங்கம் 4. களம் 1. பக்கம் 656) என வினவுவது கண்டு எரியலின் நிலைக்கு மிக்க இரக்கங் கொள்ளவேண்டி யிருக்கின்றது.

விரும்பினும் அன்புகொள்ள மாட்டாமை ஆவியேயாகிய எரியலின்குணம். மற்று, அது இடைவிடாமல் விடுதலை பெறவேண்டுமென்று அவாவியதற்குக் காரணமாவதும் இந்தக்குணமே. ப்ராஸ்ப்பீரோவைவிட வேறோர் நல்ல எசமானன் வாய்த்தல் இயலாது. எவ்வளவோ அருமையுடன் அவன் நுண்ணிய மெல்லிய அவ்வேரியலைப் பாராட்டி நடத்துகின்றான். ஆயினும் 'விடுதலை விடுதலை' என்று அது கதறுகின்றது. செய்வதில் யாதும் வருத்தமில்லையாயினும் ஊழியம் செய்ய உடன்பட மறுக்கின்றது. "இன்னமும் உளதோ உழைப்பு" (அங்கம் 1, களம் 2, பக்கம் 230) என முரணுவதை ஏரியலின் குரலினும் முகத்தினும் ஒருங்கே ஞான்றுங் காணலாம். வேலை செய்யப்படாதென்னும் விருப்பமே விடுதலை வேண்டுவதன் பொருள். அன்பு இல்லாவிடத்தில் ஊழியத்திற்கு உடன்படுதலரிது.

முன்னுரைத்த வண்ணம், உண்மை விடுதலை என்பது ஊழியத்தில் அமர்தலில் அல்லாமல் அதனின்று தப்பிச்செல்வதில் ஒருபோதும்இல்லை. அன்புவிளையாதவிடத்தில்ஊழியம்புரிய உளம்வராதென்பதையுங் கண்டோம். விடுதலை வேண்டுவதெல்லாம் அன்பில்லாமையின் அடையாளமே.

காற்றின் வடிவாய ஏரியலின் திறத்தில் கண்ட இவ்வுண்மையையே மீண்டும் அக் காண்டாமிருகம் காலிபன் திறத்திலுங் காணலாம். அரை மீன் அரை மனிதன், அரை மனிதன் அரைப்பேய் ஆகி உருவமேபோல் உள்ளமுங்கோணிய காலிபனுக்கும் ஊழியமெல்லாம் வெறுக்கத்தக்க அடிமைத்தனமேயாகத் தோன்றுகின்றது. பேய்க்குணம் பெரிதுடைமையால் அன்பிற்கு அவன் இணங்கமாட்டாதவன் ஆகின்றான். ப்ராஸ்ப்பீரோ அவன் குணத்தினை உயர்த்துதற்கு முயன்றதெல்லாம் வீணாயிற்று. காலிபன் அத்தனையும் மண் மண்ணே; எனினும், ஏரியலைப்போ லல்லாமல், அரைபளவேனும் மனித இனத்தைச் சேர்ந்தவன். தீமையின் உருவமே போல்பவனாயினும், இளமைதொட்டு ப்ராஸ்ப்பீரோ கற்பித்த கல்வியால் அவன் உயரிய வாழ்க்கைக்கு ஒருவாறு உரியவனாயினும் ஆகலாம். எனினும் அவனது கயமையால் அப்பயன் எய்தாதொழிகின்றனன். அன்பும்பகையும்மனிதற்குரியது. தான் மனிதன் என்பதற் கேற்கப் பகைமையே பயில்கின்றனன். கற்ற கல்வியைப் பகைமைக்கே பயன்படுத்தி, ப்ராஸ்ப்பீரோவையும் மிராண்டாவையும் சபித்துக்கொண்டே களத்தினுள் கால்வைக்கின்றனன் (அங்கம் 1. களம் 2. பக்கம் 294)

நீ எனக்குப் பாஷை கற்பித்தாய், அதனால் யான் பெற்ற இலாபம் உன்னை எவ்வாறு சபிப்பதென்பதை அறிவதே

—அங்கம் 1, களம், 2 பக்கம் 311.

எனக் காலிபன் விளம்பிய கொள்கை இற்றைநாள் எத்தனையோபலர் கருத்தில் வலியுறுத்து நடைபெறக் காணலாம்.

என்னிடத்திலிருந்து நீ கவர்ந்துகொண்ட இந்தத் தீவானது என் தாயான ஸைக்கொராக்ஸினால் என்னுடையது.

—அங்கம் 1, களம் 2, பக்கம் 294

என்று காட்டுவதார், காலிபனது உறவினர் இக்காலத்தில் கணக்கிறந்து கதறுவதை நினைப்பூட்டுகின்றது. திசைபுரிதற்கு வேண்டிய சூழ்ச்சித்திறமையை அவன்பால் காணலாமேயன்றி நன்மையை ஏற்றுக்கொள்ளக்கூடியதன்மையால் எள்ளளவும்இணங்கக் காண்கிலம். இத்தகைய இயற்கையில் அன்பென்பது எங்ஙனம் சாரும்; ஆகையாற்றான் ப்ராஸ்ப்பீரோவிற்குஊழியஞ்செய்ய மறுக்கின்றான், "அச்சமே கீழ்மக்களது ஆசாரம்" என்றவள்ளுவர் வாக்கிற்கிணங்க, எரியலுடன் மற்ற ஆவிகள் தனக்குச் செய்யும் துன்பங்களுக்கு அஞ்சிக் கட்டைசுமப்பானன்றி ப்ராஸ்ப்பீரோ தன்பால் பரிவுகூர்ந்து நல்லதுசெய்யமுயன்றதன் நிமித்தமாக இணங்கான், இப்படி அன்பிற்கிணங்கா வன்னெஞ்சனைதாற்றான் காலிபனும் விடுதலை அடைய அவாக் கொண்டவனாயினன். அந்தக் கீழ்மக்கள் ஸ்டிப்பானோவும் ட்ரின்குலோவும் வந்து சேர்ந்தவுடன், அன்பில்லா இவ்விருபி கொண்டிருந்த விடுதலைப் பேரவா, அதற்குரிய விளம்பரமும் பெற்று வெளியிடப்புகுந்தது—

மீனுக் கணையோ இனிக்கட்டேன்
வேண்டும் விறகோ இனிக் கொணரேன்

நானோ சட்டி இனிச்சுரண்டேன்
இனியோர் தட்டும் நான்கழுவேன்
பான் பான் கக்காலிப்பான்
புதிய எசமான் பெற்றேனாய்ப்
போனேன் போனேன் இனிமேல்நீ
புதிய ஆளைத் தேடிக்கொள்

விடுதலை, அடேயடே; அடேயடே, விடுதலை! விடுதலை அடேயடே, விடுதலை.

—அங்கம் 2, களம் 2, பக்கம் 557

என்று கதறுகின்றான். இவன் பெற்ற புதிய எசமானனைப் பின்னர்ப் பேசுவோம்; அன்பென்னும் தெய்வத்தன்மை இன்மையால் வேலையை வெறுத்து விடுதலை நாடுகின்ற செய்தியே இக் காலிபனிடத்தில் இப்பொழுது கருதற் குரியதாகி நிற்கின்றது.

இவ்வண்ணம் அன்பிற்கிணங்கா வன்னெஞ்சன் காலிபனுக்கு எல்லா வேலையும் வருத்தமே. மற்று, இவர்களுக்கெதிர், அன்பர்களாகிய மிராண்டாவும் பர்டினண்டும், ஊழியத்தையும் விடுதலையையும் எவ்வண்ணம் கருதுகின்றனர்?

ஊழியத்தின் அழகு பர்டினண்டின் திறத்தில் நன்கு காட்டப்பெற்றிருக்கின்றது. அன்பின் பொருட்டு உழைப்பதே மானுடஉரிமையின் சிறப்பாகும் என்பதைக் காட்டுதற்கே ஷேக்ஸ்பியர் மூன்றும் களத்தின் முதலில் காணும் நிகழ்ச்சியை அமைத்தனர் எனக் கருதலாம். அன்புடைய ஊழியத்தில் அழகும் உவகையும் எய்தவல்லார் மனிதர்களே. மிராண்டாவின் பொருட்டு முணுமுணத்தலின்றியும் மகிழ்வுடனும் கட்டை எல்லாம் சுமப்பான் பர்டினண்ட்:—

என்நிலையில், மிராண்டா, யானோ ரிளவரசன்: மன்னனே என்றும் நினைக்கின்றேன்......உன்னை யான் கண்ணுற்ற அக்கணமே எனது இதயம் உனக்கு ஊழியம் செய்யப் பரந்துநாடிற்று; என்னை அதற்கடிமையாக்க அங்கே தங்கியுமிருக்கின்றது. நின்பொருட்டு இந்தப் பொறையுடைக் கட்டைக்காரனாயிருக்கின்றேன்யான்.

—அங்கம் 3, களம் 1, பக்கம் 572.

ஊழியத்தை இவ்வாறு உவக்கின்றகாதலன் இவன் விடுதலையை மதித்த தன்மையும் இன்னதற்கு ஒத்தபடியே இருக்கின்றது:—

என் சிறையிலிருந்து இம் மாதராளைத் தினமொரு முறை காணப்பெறுவேனேல்.....உலகில் மற்றெல்லா மூலைகளையும் விடுதலை தனக்கு உதவியாக்கிக்கொள்ளட்டும். இத்தகைய சிறைக்கூடத்தில் போதிய இடம் எனக்குளது.

—அங்கம் 1, களம் 2, பக்கம் 408.

அன்புகொண்ட மிராண்டாவின் மனமும் அவனை அன்னவாறே ஊழியத்திற்குத் தூண்டுகின்றது:—

நீ உட்காருவாயாயின் அக்காலம் கட்டைகளை நான் சுமந்து கொணர்வேன். தயைசெய்து அதனை என்கையிற் கொடு; அடுக்கிற்கு நானே கொண்டு செல்கின்றேன்.

—அங்கம் 3. களம் 1. பக்கம் 571.

மிராண்டா:—என்னை நீ மணப்பாயாயின் நான் உன் மனைவி, இல்லையேல் நின் கன்னியாச் சாவேன். உன்றன் துணைவியாக நீ மறுக்கலாம்; மற்று நீ இசைந்தாலும் இசையாவிடினும் உன்வேலைக்காரியாயிருப்பேன்.

பர்டினண்ட்:—காதல்சால் மாதராய், என்னுடைத் தலைவி! என்றும் நின்றனக்கு இங்ஙனம் தாழ்மையேன் யான்.

மிராண்டா:—ஆயின், என்கணவனோ?

பர்டினண்ட்:—ஆம், தளைதான் விடுதலைக் கென்றும் இசைவதை ஒக்குமொரு மிதயமுடன்—இந்தா என்கரம்.

என இவர் இருவரும் ஒருவருக் கொருவர் தொழிலுரிமை பூணுதல் அன்றோ அன்பிற்குக் களமாய மானுடப் பெருமை. எனினும் ஒன்று. காதலின் வேகத்தால் பர்டினண்டின் வாய்குழறுகின்றது. விடுதலையை விட்டுவிட்டு அன்பின் தளையை விரும்பி ஏற்கின்ற இவன் அதன் மறுதலையை உவமைக் கழைத்த செவ்வியனுகின்றான்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து, 2-ம் தசகம்

[845-வது பக்கத் தொடர்ச்சி]

4-ம் பாசுரம்.

ஆலி னிளிலை யேழுலக முண்டன்று
நீகிடந்தா யுன்மாயங்கள்
மேலை வானவரு மறியா
ரினியெம் பரமே
வேலி னேர்தடங் கண்ணினர்
விளையாடு சூழலைச் சூழவே நின்று
காலி மேய்க்க வல்லா
யெம்மைநீ கழறேலே

அவதாரிகை:—மேல் இரண்டு பாசுரங்களிலும் ஸ்ரீ கிருஷ்ணனைப்"போயிருந்தே குழல்ஊது" என்றும், "போயிருந்து" மற்றப் பிரிய கோபிகளுடன் "உரையாடு" என்றும் சொன்ன இப்பிராட்டி இப்பாசுரத்தில் "எம்மைக்கழறேலே" என்று மாத்திரம் வேண்டுகிறாள். இப்பொழுது, கண்ணனுக்கு ஒருவாறு இவள் சீற்றம் தணிந்ததாக ஊஹிக்கக் கூடுமாயினுமிவள் வாக்குப்பாணங்களின் கூர்மைமழுங்கிற்று என்றால் இப்பாட்டில் அவன் ராஜஸேவை செய்பவர்போல் அணுகாது அகலாது இப்பிராட்டியின் கிருபையை எதிர் பார்ப்பதால் அருள்பெறுவானென்று நாம் அறிய இடமுண்டு.

II. இப்பாசுரத்தில் "மாயவனே" என்றும் இவனின் சூதை யாரும் அறியாரென்றும் "எம்மைக்கழறேலே" என்றும் இப்பிராட்டி. சொல்ல என்ன புது ஸம்பவம் நடந்தேறியது? "காலிமேய்க்க வல்லாய்" அதாவது மணல்குன்றில் கண்ணன் நின்றுகொண்டு ஆய்ச்சியருக்கு குழலூதிப் புல்லில்லாத மணல்தரையில் பசுக்கள் வயிறுநிறைய மேய எப்படி யேனும், என்றுமேல் இப்பாசுரத்தில் பரிஹஸிப்பதால் "காலி மேய்க்கப்போனேன் அது என்னுடைய வேலை யெல்லவோ, நீ நினைத்தபோது உடனே வரக்கூடுமோ" என்றதுபோலே சில வார்த்தைகளைக் கண்ணன் சொல்லியிருத்தல் வேண்டும். "கழறல்" பேசுதல் என்பதற்குப் பொதுப்பிரயோக மானாலும் ஒருவன் மற்றொருவனோடு பேசுகையில் அம்மற்றையவன் மறுத்துரைக்க மாட்டானென்று கூறும் மாற்றத்தை உறுதி நம்பிக்கையுடன் பேசும் பேச்சு; அதாவது அந்தரங்க விசுவாசத்தில் நேசர்கள் வார்த்தைகளை அளந்து பேசாமல்(Loose) குறிப்பற்ற ஸம்பாஷணம்-The sense is-"go to, this is silly, really you dare not say so."

The rebuke is to discourage familiarity:—"நீ அந்தரங்க நேசனல்லன் - விளையாட்டுப் பேச்சு வேண்டா, நில் என்று சொன்னதாக ஆகிறது.

பொழிப்புரை:—"நம்முடைய விளம்பமல்லவோ இவளுடைய சங்கைக்குக் காரணமென்று பார்த்து, "நான் பரதந்தரனல்லவோ? நான்தான் மாடுமேய்க்கப் போக வேண்டாவோ? நீ நினைத்தபோது வரலாயிருக்குமோ? ஆகையால் தாமதித்தேன். மற்று யாதொரு காரணமும் பற்றியல்ல" வென்று இவனருளிச்செய்ய யுகப்பிரளயத்தில் ஸகல லோகங்களையும் உண்டு ஓர் ஆலிலையே கண்வளர்ந்தருளின இம்மஹா ஆச்சரியத்தையுடைய வுனக்குப் பசு மேய்க்கப்போனேனென்ற ஒரு பொய்யைக் கேட்பாருக்கு மெய்யென்றிருக்கும்படி சொல்வது ஆச்சரியமோ? பசு மேய்க்கப் போனமை பொய்யோவென்னில் வேல் போன்ற தடங்கண்ணினர் விளையாடும் மணல் குன்றுகளில் நின்றன்றோ காலி மேய்ப்பது, இந்தப் பொய்கள் எங்களுக்குச் சொல்லவேண்டா"-ஆறாயிரப்படி. உன் சூழ்ச்சிகளைப் பிரம்மாவிலும் மேலான வைகுண்ட வாசிகளான நித்திய ஸூரிகளும் அறியாதிருக்க எனக்கு அது தெரியவும் விளக்கவும் இயலுமோ?

பதக்குறிப்பு:— எம் - பரமோ என்று இரண்டு சொற்கள், எம் - எம்முடைய, பரமோ - ஆரிய "பாரம்" என்றபதமும் ஆங்கில "bear" என்பதும் ஒரே மூலத்திலுண்டான சொற்கள்; "நான் தூக்கக் கூடிய சுமையோ - நிர்வஹிக்கக் கூடிய சுமதலையோ" என்று பொருள். வேல் - ஒரே குத்தால் எதிரிகளை மாய்விப்பது போல் ஒரே நோக்கால் காமுகரை மாய்க்க வல்லது, "கண்கள்" என்கிறாள். ஆலின் நீள் இலை-"ஆலிலை"க்கு நீளம் எங்கே உளது? இல்லையே! மேற்படி இலையின் மொக்கு முகை விரிந்து அவிழும்போது அகலம் வெகு சுருக்கமானதால் இலை நீளம் போல் காட்டும்; சுண்டுவிரல் அகலநீள முள்ள சிறு இலை; என்று கவிஹிருதயம் கண்டுகொள்வது. வல்லாய் - புல் இல்லாத தரையில் காலிகளை மடக்கி வயிறு நிறைந்து பசி ஆற மேய்க்கும்படியான ஆச்சரியத்தை இயற்றுபவன் அல்லவோ நீ!!

5-ம் பாசுரம்

கழறேல் நம்பீயுன் கைதவம் மண்ணும்
　　விணும் நன்கறியுந் திண்சக்கர
நிழறுதொல் படையா யுனக்கொன்
　　றுணர்த்துவனான்
மழறு தேன்மொழி யார்கள் நின்னருள்
　　சூடுவார் வாடி நிற்கவெங்
குழறு பூவை யோடுங்
　　கிளியோடுங் குழகேலே.

அவதாரிகை:—சென்ற பாசுரத்தில் மாயங்கள் செய்பவன் பொய்யன் என்று சொல்லியாயிருக்கத் திரும்பவும் இப்பாசுரத்தில் இவனது கைதவம் கபடங்களை உலகத்தார் எல்லாரும் அறிவர் என்று சொல்வதற்கு என்ன புதுசந்தர்ப்பம் ஏற்பட்டதென்றால் கண்ணன் பூவையையும் கிளியையும் எடுத்து விளையாட ஆரம்பித்தானென்று பாசுரம் மேலே கூறுகிறது. இதற்கு இவள் கோபிக்கமாட்டுவாளல்லளென்று தன்தைரியத்தை முடுக்கிக் கண்ணன் செய்தஸாஹஸம் - பேச்சுக் கொடுத்தல்லவோ பேச்சைத் திரும்பி வாங்கவேண்டுமென்ற முறைமையால் அவன் "என் பக்கல் பொய்யுண்டோ" என்று வினவிக் கேட்டிருந்தால், ஐயோ 'உன்' பொய்களை யறியாதார் உலகத்திலுண்டோ? வென்ற மறுமொழி ஸங்கதமாகும். இதுவே இப்பாசுரத்துக் கடி.

குறிப்புக்கள்:—நான்-உன் பக்கலில் உண்மையான நேசமுள்ள யான், உணர்த்துவன் - உனக்குத் தெரியாததற்குச்சொல்ல வந்தேனல்லேன். உணர்த்துவன்- ஞாபகம் மூட்டுவேன் என்கிறாள்- கண்ணனை இப்பாசுரத்தில் இப் பிராட்டி "நான் வளர்க்கும் பூவையும் கிளியும் என்போல் சாதுரியமில்லாதன, உன்னை நேசித்து உன்னருளைச் சூடப் பிறந்தவர்கள் தேன்மொழிகள் பேசி இன்பம் ஊட்டப்படுபவர்கள் குறி தட்டுப்பட்டுத் தயங்கிப் பேசுகிற அப்பறவைகளை விட்டு விட்டு உன் பிரிய ஸஹிகள் அமிர்தம்போல் தேன்மொழிகொண்டு கொஞ்சிக்கொஞ்சி மிஞ்சிக் கலவிஇரசம் அளிப்பார்கள். அவர்கள் உன் வரவை எதிர்பார்த்து முகம் வாடாமுன்னர் நல்லதோர் ரஸாநுபவம் செய் - இது உனக்கு வெகு ஹிதம் - சொல்வதைக் கேள்: பக்ஷிகளோடு வியர்த்தமாகப் பேசுதல் வேண்டாம், விட்டுவிடு.

"நிழறு தொல்படையாய்" நிழறு - காந்தியையும் தேஜஸையும் வீசும், தொல் - பழைமையான, அதாவது அநாதியான-படையாய், சக்கராயுதத்தைக் கூறுகிறது. இதை ஸ்ரீகிருஷ்ண பகவான் பாரதப்போரில் ஜயத்திருதன்என்ற வீரனின்வதநிமித்தமாய்ச் சக்கராயுதத்தை ஏவிப் பகலிலே ஸூரியனை மறைத்து இரவாக இருட்டுத் தலையெடுக்கச் செய்த சூழ்ச்சியை இப்பிராட்டி யெடுத்துச் சொல்லுகிறாள். இப்பிராட்டி குமாரியா யிருக்கும் அவஸ்தையில் பாரதப்போர் நடக்கவில்லையே யென்ற ஆக்ஷேபம் தோன்றலாம். ஆழ்வார் புராணங் கேட்டு அறிந்தவராகையால் உரைத்தபடி. இவளும் பகவத் பிரஸாதத்தினால் எதிர்கால நிகழ்வை உணர்ந்திருக்கவுங் கூடும்.

பொழிப்புரை:-இப்படித் தன்னை உத்தேசித்து மேன்மேல்இவர் சொன்ன வார்த்தைகளையே தனக்குப் பற்றுக்கோலாகக் கொண்டு இவளுடைய கிளிகளையும் பூவையும் எடுத்து அவற்றைக்கொண்டு ஏற்கனவே கற்பித்திருந்த தன் திருநாமங்களைச் சொல்லவைத்து ஒருவாறு மனந்தெளிந்து "என்பக்கல் பொய்யுண்டோ" வென்று கண்ணபிரான் அருளிச் செய்ய உன்னுடைய பொய்களை யறியாதவர்களுண்டோ? பகலை இரவாக்க வல்லவனல்லையோ? அது நிற்க ஒருஹிதஞ் சொல்லக் கேள். அதுதானென்னில் உன் திருநாமங்களைக் கேட்டுக்கொண்டிருந்தாயாகில் நின்னருள் சூடுவார் மனம் வாடும். ஆகையால் இவ்வண்ணம் நின்று எங்களுடைய பூவைகளையும் கிளிகளையும் ஷி திருநாமங்களைச் சொல்வித்துக்கொண்டு கேளாதே. உன்னுடைய மழறு தேன்மொழியார்களை உன்னுடன் பேசவைத்துக் கொண்டு காதால் கேட்டு ஆநந்தமடைவாய்.

விசேஷக்குறிப்பு:—மற்ற பிராட்டிமார் முகம் வாடினால் கண்ணன் கண்டு ஸஹியாமல் உயிரை மாய்த்துக் கொள்வான் என்று ஹாஸ்யம்.

ஸ்வாபதேசத்தில் பூவையும் கிளியும் ஆழ்வாரின் ரஸிக கோஷ்டியும் சீடர்களும் ஆவார். பகவான் அவர்களை உகப்பாய் ஆழ்வாரின் நிமித்தம் ஆதரிப்பானென்று திருவுள்ளம்.

ஞான தீபம்

[841-வது பக்கத் தொடர்ச்சி]

மானுடனுள் பரமாத்மா ஊடுருவிச்சென்று பரிணமித்தலும், பரமான்மாவை நோக்கி ஜீவான்மா உயர்ந்து அதுடன் கலந்து நிற்றலுமேதான் ஜீவப்பிர்ம்ம ஐக்கிய மெனப்படுவதாகும். பிரகிருதிப் பொருள்களெல்லாவற்றையும் ஊன்றிப்பார்த்து, அவைகளுள் விரிந்து நின்று, அவைகளின் சூக்ஷ்மத்தை உணர்தலேதான் உலக வாழ்க்கையின் கருத்தாகும். ஒன்றற்குள் ஒன்று பாய்ந்து கலந்து நிறைந்து நிற்றலை அழிவெனவும் இழிவெனவும் இயம்பலாகாது. யாவற்றிற்கும் அழிவுதான் முடிவெனின், இவ்வார்ப்பாடங்க ளேனோ?

வாழ்க்கையின் அடிமுடிகள் ஆவது ஆனந்த நிலையேயாம். இம்மெய்யைஉணர்வோமாயின், சாந்திநிலை எய்தி ஈஸ்வரனைத் தரிசித்து இன்புறுவோம்.

கருணையே உள்ளக் கருத்தாவது; ஆனந்தமே தொனியாவது; சக்தியே ஸ்வரமாவது; ஞானமே பாடகன்; சங்கீதங்கள் தொடுப்பவனும் கேட்டு அநுபவிப்பவனும் நிரந்தரப் பரிபூர்ண வஸ்துவாகும். ஆரம்பத்தில் தோன்றும் வித்தியாசங்களையும் முரணையுமேதான் நாம் பார்த்துக்கேட்டுக் கலங்கி ஐயுறுகின்றோம். எனினும், பொறுத்து முற்றிலும் கவனித்துப் பார்ப்போமாயின், தெய்விக ஆனந்தமாகிய சாகரத்தின் திரைகள் ஒன்றின்மேலொன்றாக எழுந்து, ஒன்றையொன்று தொடர்ந்து, வந்து ஒன்றுடனொன்று இயைந்து இயங்குகையில் எழும் இனிய கீதத்தைக் கேட்டுச் சாந்தியும் இன்பமும் உறுவோம்.

ஜீவராசிகளெல்லாம் விடுதலைபெற அவாவினும், பந்தங்களைத் தெறித்து உதறி மேலெழ முயலாமல் அவைகளையே மீட்டுமீட்டும் கட்டித் தழுவுதலால், அப்பந்தங்கள் பெருகிப் பலமுற்று ஆன்மாக்களைப் பற்பல அவதிகளுக்குள் அழுத்தி வருத்துகின்றன. விடுத்தற்கியலாத இரகசியங்களுள் முதலாவது இதுவேயாகும்.

ஜனனமாகிய பந்தத்தை மனிதன் விரும்புவதினாற்றான், ஜனனத்தின் தொடர்பான மரணத்திற்குள்ளாகின்றான். எனினும், பாசக்கட்டுக்களை அவிழ்த்து எறிந்து விடுதலைபெற்று உய்தற்கான மார்க்கங்களையும் இடையில் நாடி வருகின்றான்.

ஒன்றையொன்று எதிர்த்துச் சிந்தித்துச் சிதறியோடும் அலைகள் நிறைந்துள்ள கடலை ஒத்தது இவ்வுலகம். ஒரு திவலையைக் கடந்து மேற்செல்கையில், இதர அலைகள் சூழ்ந்து தாக்குதல்போல், ஒரு துன்பத்தினின்று விடுபட்டு நாம் வெளிவருகையில், பற்பல இதர இன்னலிடர்கள் நம்மீது பாய்ந்து நம்மை முரித்து வீழ்த்த முயல்கின்றன.

புகழை விழைதலினால், கோழைத்தனத்தாலும் துர்ப்பலத்தாலும் கவரப்பட்டுப் பெருமூச்செறிகின்றோம். சுகபோகங்களை நாடிப் பாடுபடுவதால், வலி வருத்தங்களுக்கு இலக்காகி வாடுகின்றோம். சுகபோகங்களின் விளைநிலமான ஆசாபாசங்களைத் துறந்து பொறுமையுடன் விளங்கும் ஆன்மாதான் ஆனந்தத்தில் நிலைநிற்றற் கியலும்.

சாந்திநிலை எய்தக் கருதினும் பலதிற அனுபவங்களைப் போகிக்க ஆவலுற்றுச் சுயமாக நிம்மதியற்றுச் சலிக்கும் புலன்களையும் திருப்தியற்ற மனஹிருதயங்களின் போக்கையும் அநுசரித்து ஒழுகுவதால், மனிதன் அலைந்து கெட்டழிகின்றான்.

ஆனந்த நிலையை உக்கிர அவதி எனவும், சும்மாயிருக்கும் தன்மையைச் சோம்பலெனவும் சத்தற்றதெனவும் கருதல் தவறாகும்.

சரீர போஷணையையும் சுகத்தையும் பெரிதும் மதித்தவரினும், இடையில் மனோவிசாலத்தையும் ஸ்தூலப் பொருள்களினின்று விடுதலையையும், வாழ்க்கை நித்யத்வத்தையும், ஆத்மானந்தத்தையும் மனிதன் அடைய விரும்புகின்றான்.

அமிர்தத்தை மாத்திரமன்று, விஷத்தையும் பருகி ருசிபார்த்தறியும் ஆவல் பொருந்தியுளனும் மனிதன்.

இத்தகைய முரண்பட்ட குணநடத்தைகள் பொருளும் பயனுமற்றன வல்ல. அவ்விபரீதங்களினின்று விடுதலையுண்டு. அவைகள் பிரகிருதியின் குணநிசயங்களாவனபோலும். மேலும், வாழ்க்கைப் பயனையும் அகச்சக்தியையும் ஜீவான்மாவுக்கு உறுதியுடன் தெளிவித்தலே பிரகிருதியின் நியமமாகும். அவ்விபரீதங்களால் அலைப்புறுத்தப்படாவிடில், ஜீவான்மாவானது விழித்து அகம்புற ஆராய்ச்சியிற் புகுந்து, செந்நெறி பற்றி நடந்து, விடுதலைபெற்றுப் பூர்ணனாக விளங்காது; மற்று இக்கருத்து எழாது போலும்.

சிறந்தனவாகப் பாராட்டப்படும் புஷ்டி செல்வாக்கு இடம்பக்கிரியை முதலாயினவைகளின் புன்மையைப் புலப்படுத்துவன நம்முடைய குற்றங்குறைகளேயாம். சக்திகளின் இசைந்த இயக்கங்களானவை ஜீவனின் லீலைகளாவன; துர்ப்பலமும் அச்சவுணர்ச்சியும் மரணத்தின் எச்சரிக்கைகளாவன; ஜீவனின் உயரிய இலக்ஷியத்தையும் தற்போதைய போக்கின் அவலத் தன்மையையும் உணர்த்தும் தூதனும் மரணம். மாந்தரிற் பெரும்பாலோரும் நாடிப் பற்றும் சுகபோகங்களெல்லாம் அநித்யமெனவும், நிரதிசய இன்பத்திற்குத் தடையாக நிற்பன எனவும் வற்புறுத்தற்காகவேதான் வலியும் வருத்தமும் தோல்வியும் ஏக்கமும் படையெடுத்து நம்மைத் தாக்குகின்றன போலும். நாம் துய்க்கும் போகங்களெல்லாம் நக்ஷத்திரங்களை ஒக்கும்; நாம் பெற்று அநுபவிக்க வேண்டிய ஆனந்தம் சூரியனை நிகர்க்கும்.

நானாவித உபாதிகள் உறைந்து வளர்ந்து அழிவதான தேகத்துள் ஆன்மாவும் மனமும் குடிப்புகுந்து அவ்வுபாதிகளை நீக்கி ஆரோக்கிய தேகமாகப் புதிப்பித்து வலியதாக்கி, நித்யானந்த அநுபவத்திற்கான சற்பாத்திரமாக அத்தேகத்தை மாற்றவேண்டும்.

உலகாதிகளில் தன்னையும் தன்னில் உலகாதிகளையும் கண்டு ஒன்றி விளங்குதலே விடுதலை என்பது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளீவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்யப்பட்டது) I.D.L. 61. மெடிகேட்டட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட.ச்யாவனப்ராச. சிறந்த டானிக். சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்டாலக்ஸ்
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

மக்களனைவரும் விடுதலையடைந்து ஆனந்திக்கும்பொருட்டுத் தம் மனோவாக்குக் காயங்களைத் தியாகித்துப் பொதுவாக மாந்தர்படும் அவதிகளி லீடுபட்டு அவர்களுக்கு உதவிபுரிதல் சுதந்திரம் எய்திய பேரான்மாக்களின் கடனாவதுபோலும் சுகதுக்கங்களும் அயர்ச்சியும் மரணமும் அப்புருஷர்களைப்பாதித்துக்கட்டுப்படுத்தாவாம்.

எளியர்களும் பேதையர்களும் 'உயர்குடி' யிற் பிறவாதவர்களும் அநாகரீகர்களும் தாழ்ந்த இனத்தைச்சேர்ந்தவரல்லர். மற்று, சிற்றறிவுடைத்தாய்ச் சிறுதொழில்களில் தலையிட்டு இவைகள்தான் வாழ்க்கையின் சிறந்த முடிபெனக்கொண்டு, யாதொரு உயரிய சிந்தனைகளுமற்று உழல்பவர்களும், மெய்யறிந்தும் தக்கபடி நடக்காமல் சோம்பியிருப்பவர்களுமே தாம் தாழ்ந்தவர்கள்.

யுத்த பூமியாகவும் கொலைக்களமாகவும் விளங்கும் இவ்வுலகில், அவைகளினின்றுஉண்டாகும் கலவரங்களையும் சேதத்தையும் அழுகையையும் பார்த்துக் கேட்டு வருகையில், கண்ணை மூடிக் காதையடைத்து வாயைப்பொத்திஅவமேஉட்கார்ந்துவிடல் தகுமோ. இவ்வாறு செய்வோமாயின் சமாதானமும் க்ஷேமமும்ஆனந்த நிலையும் கைகூடுமோ? அவைகளை வென்று அடக்குதலன்றோ புருஷத்வமாவது. தற்பொழிவும்பொய்யும் வஞ்சகமும் அசுயையும்பூரிக்கப்பெற்றுள்ள மாக்களைத் திருத்தி உயர்த்த முயற்சிசெய்யாமல் அவர்களை நிந்தித்து அவர்களிடமிருந்து பிரிந்து மலைகளிலும் புதர்களிலும் குகைகளிலும் ஓடி ஒளிபவன் மேன்மகனோ? இதுவோ ஞானத்தின் கருத்தாவது, ஆனந்தத்தின் இயல்பாவது?

தூசுகள் செறியப்பெற்ற தங்கத்தைப் பன்முறை நெருப்பிலிட்டுச் சுத்தஞ்செய்து, சுயவொளியுடன் பிரகாசிக்கச் செய்தல்போல், கெட்டியான இரும்பை உலையிலிட்டுக் காய்ச்சியடித்துப் பதப்படுத்தல்போல், கடற்கொந்தளிப்பு சண்டமாருதம் எரிமலை பூகம்பம் வெள்ளம் வறட்சி புரட்சிகளாலும், வேறு பல இடையூறிடுக்கண்களாலும் வலிவருத்தங்களினாலும் இழிகுணவொழுக்கங்கள் பூரிக்கப்பெற்ற நீசர்களை ஜகதீசன் அடக்கித் திருத்தி உயர்த்துகின்றார்போலும். புல்லியர்களை வேறெவ்வுபாயத்தினாலும் சீர்ப்படுத்தற்கியலாது போலும்.

முற்றிற்று.

189172

வர்த்தமானம்

சாவைத் தடுத்தல்:—அமெரிக்காவில் இறந்த ஒரு கோடீஸ்வரரை டாக்டர். ஹிமான் என்பவர் 48மணி நேரம் உயிர்ப்பித்துப் பேசவும் எழுதவும் செய்தார். இந்தக் கோடீஸ்வரர் நெடுங்காலமாக இருதய நோயால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். திடீரென இறந்துவிட்டார். இறக்கும் சமயத்தில் அவரது ஒரே குமாரர் நெடுந் தூரத்திலிருந்தார். ஆதலால் தகப்பனார் இறக்கும்போதுவரமுடியாது போயிற்று. ஆனால் தகப்பனோ தன் குமாரரிடம் சில முக்கியமான விஷயங்களைக் கூறவேண்டியிருந்தது. ஆகவே டாக்டர். ஹிமான் என்பவர் ஒரு அபூர்வ இயந்திரத்தால் இருதயத்தை மீண்டும் துடிக்கச் செய்து இறந்தவரை 48 மணி நேரம் உயிருடன் வைத்துக்கொண்டிருந்தார். இதற்குள்ளாக மகன் வரவே, தகப்பன் அவரிடம், தாம் தெரிவிக்க வேண்டிய முக்கியமான விஷயங்களையெல்லாம் தெரிவித்துவிட்டு மீண்டும் இறந்துவிட்டார்.

* * *

ஒரு மணிக்குள் நடப்பது:—உலகத்தில் ஒவ்வொரு மணி நேரத்துக்குள் 5440 குழந்தைகள் பிறந்துகொண்டேயிருக்கின்றன. ஒவ்வொரு மணிக்குள்ளும் 4630 பேர்கள் இறந்துபோகின்றார்கள். எனவே ஒவ்வொரு மணிக்குள்ளும் 810 பேர்கள் ஜனத்தொகையில் பெருகிக்கொண்டே வருகின்றனர். உலகில் ஒவ்வொரு மணி நேரத்துக்குள்ளும் 1200 விவாகங்கள் நிழ்கின்றன. 15 கொலைகளும் 500 விவாகரத்துக்களும் ஏற்படுகின்றன. இந்தியாவின் மக்களில் ஒவ்வொருவரும் ஒரு மணிக்குள் சராசரி ஒரு தம்படி முதற்கொண்டு 3½ ரூபாவரை சம்பாதிக்கின்றனர். அமெரிக்க எலெக்டிரிக் கம்பெனிக்காரர் ஒருவர் மணிக்கு முன்னூறு ரூபாய் சம்பாதிக்கிறார்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round. All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

கோடையின் கொடுமை
நீங்கள் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட
எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா?
மூளையைக் குளிரச்செய்து கை கால், கண்களின் எரிச்சலைச் சமனஞ்செய்து தலை மயிரை நீண்டு வளரும்படி செய்யும். உடனே வாங்கி உபயோகியுங்கள்.
5 தோலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.
இனும்! கேட்லாக். இனும்!!
ஸ்ரீதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)